குருபாதம்

# ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 40 )( ரௌத்திரி ஆண்டு பங்குனித்திங்கள் 10—4—81 )( இதழ் 5

தருமையாதீனத் திருமடத்தில்:



**ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களும்,**

அமெரிக்காவில் வெள்ளையராய்ப்பிறந்து, சிவன்கோயில் நிறுவி, சைவசித்தாந்தக் கொள்கைகளை அந்நாட்டில் பரப்பிவரும்

**தவத்திரு. சுப்பிரமணிய சுவாமிகளும்.**

30...1...1981

தருமையாதீனக் குருமுதல்வர்



ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள்

உ

குருபாதம்

## ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருள்வாக்கு

—[★]—

நீரிலே மூழ்கிலுமென்
  நித்தமருச் சிக்கிலுமென்
பாரிலே சுற்றிப்
  பணியிலுமென் — வேரிலே
உற்றிருந்தா லன்றோ
  உயிர்க்குறுதி ஒன்றிரண்டும்
அற்றவனே சொக்கநா தா.

— சொக்கநாத வெண்பா. 75


ஆசிரியர் :-

வித்துவான்
**இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள்**

துணையாசிரியர் :-

மகாவித்துவான்
**சி அருணைவடிவேல் முதலியார்**



உ

குருபாதம்

# “ ஞானசம்பந்தம் ”

**தருமையாதீனத் திங்கள் இதழ்**

| மலர் 40 | 10-4-81 | இதழ் 5 |
|---|---|---|


## உட்பொருள்


| எண் | | பக்கம் |
|---|---|---|
| 1 | பயனுள்ள தகவலுக்குப் பரிசு ... | 201 |
| 2 | தருமை ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் வழங்கிய அருளுரை | 206 |
| 3 | தலப் பெயர்களில் கவிப் புனைவுகள்... | 208 |
| 4 | களவுபோன தங்க நகைகளின் விபரம் ... | 212 |
| 5 | புத்தாண்டு ஆசிச்செய்தி | 213 |
| 6 | திருவாமூரில் குருபூஜை விழா ... | 214 |
| 7 | பார்வையாளர் குறிப்பு | 216, 228, 236 |
| 8 | திருநாகைக்காரோணத் தலச் சிறப்பு ... | 217 |
| 9 | அபிராமி அந்தாதி ... | 229 |
| 10 | செய்திகள் ... | 237 |
| 11 | எதிர்காலம் ... | 241 |
| 12 | “ திருமுறைக் கலாநிதி ” பட்டம் பெற்றவர்கள் | 248 |



ஆண்டுச் சந்தா உள்நாடு ரூ. 10
ஆண்டுச் சந்தா சிலோன் ரூ. 12
ஆண்டுச்சந்தாவெளிநாடு ரூ. 18
ஆயுள் சந்தா உள்நாடு ரூ. 100
ஆயுள் சந்தா வெளிநாடு ரூ. 125

உ

குருபாதம்


# ஞானசம்பந்தம்

மலர் 40 || ரௌத்திரி - பங்குனி - 10—4—81 || இதழ் 5


திருச்சிற்றம்பலம்

பொன்தயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்தயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. — சம்பந்தர்

திருச்சிற்றம்பலம்

## பயனுள்ள தகவலுக்குப் பரிசு

நீலத் திரைக்கடல் ஓரத்திலே — நின்று
நித்தம் தவம்செய் குமரிஅன்னை — வட
மாலவன் குன்றம் இவற்றிடையே — புகழ்
மண்டிக் கிடக்கும் தமிழ்நாடு.

எனத் தமிழகத்தின் பெருமையை வியந்தார் அமரகவி பாரதியார். தமிழகம் தெய்விகக் கலைவளம் சிறந்த திருநாடு. இதன் பெருமையெல்லாம் காலங்காலமாக நம் முன்னோர் போற்றிப்புரந்த சமயநெறிகளையும், இவற்றைச் சார்ந்த கலைகளையுமே சார்ந்துள்ளன. வான்முட்டும் கோபுரங்கள், பரவசப் படுத்தும் கருவறைகள், உயிர்ப்புடைய இறைவர்திருமேனிகள், விலை மதிப்பற்ற திருவாபரணங்கள் போன்றன இன்றும் உலகினரை வியப்பில் ஆழ்த்தும் சிறப்பின. இத்தகு கலைச் செல்வங்களை அரசும், ஆதீனங்களும், அறநெறி வழுவாத

சான்றோர்களும் கண்ணெனப் போற்றிப் புரந்துவந்தனர். புரந்தும் வருகின்றனர். காலத்தின் கோலமாக நம்மவர்களே இத்தகு கலைச்செல்வங்களுக்குப் பெருங்கேடு சூழ்வது அண்மையில் நடைமுறைச் செய்திகளாகி வருகின்றன. அரிய நமது இறைவர் திருமேனிகளைக் கடத்தி விற்கும் கொடுமை ஒருபால்; அற்புத வேலைப்பாடுகளமைந்த விலை மதிப்பற்ற திருவாபரணங்களைத் திட்டமிட்டுக் களவாடும் அவலம் ஒருபால் நிகழ்ந்து வருவது நாம் அனைவரும் கவலையோடு நினைவுகூர்ந்து வெட்கப்படத்தக்கனவாகும்.

## ஒருபெரிய சவால் :

தருமையாதீனம், தஞ்சை மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டங்களைச் சார்ந்த 27 திருக்கோயில்களைப் பல நூறு ஆண்டுகளாகப் போற்றிப் புரந்துவருகிறது. பரம்பரை அறங்காவலர்களாக விளங்கிவரும் இவ்வாதீன குருமூர்த்திகள் இத்திருக்கோயில்களைக் கண்போல் பாதுகாத்து வந்துள்ளனர். இத்திருக்கோயில்களின் இன்றைய வளங்கலெல்லாம் தருமை ஆதீன அருளாட்சிக்காலத்தில்தான் வந்து எய்தின என்பதற்கு நிறைவான சான்றுகளுண்டு. இத்தகு கலைவளம் மிக்க ஆதீனத் திருக்கோயில்களில் மார்ச்சு மூன்றும்நாள் சுமார் ஐந்துலட்சம் மதிப்புள்ள புராதன - கலைச்சிறப்புமிக்க திருவாபரணங்கள் களவுபோன செய்தி அனைவருக்கும் பேரதிர்ச்சியாக அமைந்தது. ஆதீனத்திற்கும் - அரசுக்கும் - அன்பர்களுக்கும் இக்களவு ஒருசவாலாகவே தோன்றுகிறது. இன்றுவரையில் எடுத்துக்கொள்ளப்பட்ட பல்வேறு முயற்சிகள் வெற்றி பெறவில்லை.

## நடந்ததென்ன :

பங்குனி உத்திரத்திற்கு முன்பு நடைபெறும் ஸ்ரீ சந்திரசேகரர் விழாவிற்கு இறைவன் திருவீதியுலாவில் சாத்துபடி செய்வதற்கென மார்ச்சு மூன்றும்நாள் காலை திருக்கோயில் மெய்காவல் திரு. சி. சுப்பிரமணியபிள்ளை என்பவர் களவு போன நகைகளும் வேறு சில நகைகளுமாகப் பல நகைகளைக் குருக்களிடம் ஒப்படைத்துச் சுவாமிகளுக்குச் சார்த்தச்செய்தார். காலை வீதியுலாவுக்குப் பின்னர் இவற்றைக் குருக்களிடமிருந்து திரும்பப்பெற்று உரிய இடத்தில் வைத்துப் பூட்டியதாகவும், இரவு 7. மணி அளவில் சில திருவாபரணங்கள் காணப்படவில்லை என்றும் அவர் வந்து கோயில் மேலதிகாரிகளிடம் தெரிவித்தார். உடன் இச்செய்தி சீகாழி காவல்நிலையத்திற்கு

அன்றிரவே தெரிவிக்கப்பெற்றது. தருமை ஆதீனத்திற்கும் இதுவிபரம் தெரிவிக்கப்பெற்றவுடன் ஆதீன மேலாளரும், கண்காணிப்பாளர்களும் இதன் விபரத்தை மாயூரம்காவல்துறை துணைக்கண்காணிப்பாளர் அவர்களிடம் தெரிவித்துவிட்டு வேளூர் விரைந்தனர். 3—3—81 இரவிலேயே சீகாழி போலீஸ் துறையினரும் மாயூரம் போலீஸ் துணை கண்காணிப்பாளரும் திருக்கோயிலுக்குவந்து விசாரணையை ஆரம்பித்து, சில வீடுகள் சோதனைசெய்யப்பெற்றன. துப்பறியும் நாய் சென்னையிலிருந்து தருவிக்கப்பட்டது. கைரேகை நிபுணர்களும் வந்தனர். துப்பறியும் நாய் மெய்காவல் திரு. சி. சுப்பிரமணியப் பிள்ளையை அடையாளம் காட்டியது. அவரையும் உதவிமெய்காவல் திரு. ஐயாக்கண்ணுப் பிள்ளையையும் காவல்துறையினர் விசாரணைக்கென நிறுத்திவைத்தனர். நகை களவுபோன செய்தி 4—3—81 அன்று சென்னை அறநிலையத்துறை ஆணையர் அவர்களுக்கும், நாகை துணை ஆணையர் அவர்களுக்கும் தனித்தனியே இரு தந்திகள்வாயிலாகத் தெரிவிக்கப்பட்டது. அன்றே விபரமான கடிதங்களும் இவர்களுக்கு எழுதப்பெற்றன.

## மீட்பு முயற்சிகள் :

காவல்துறையினர் மிகுந்த பொறுப்புணர்வோடு ஆய்வு மேற்கொண்டனர். நாகை காவல்துறைக் கண்காணிப்பாளர் அவர்களும் நேரில்வந்து புலனாய்வை விரைவுபடுத்தினார்கள். ஏதும் இதுவரை புலனாகவில்லை. ஐயத்தின்பேரில் திருக்குளம், மற்றும் கிணறுகளிலுள்ள நீர் இறைத்துப் பார்க்கப்பட்டது. புலனாய்வு தற்போது சி. ஐ. டி. காவல்துறையினரிடம் ஒப்புவிக்கப்பட்டுள்ளது. பலவாறு ஆய்வு மேற்கொண்டும், களவு போன திருவாபரணங்கள்பற்றி எவ்விதத் தடயங்களும் இதுவரை கிடைக்காதிருத்தல் பெரிதும் துயர் விளைவிப்பதாகவே உள்ளது. இதுபற்றிச் செய்திப் பத்திரிகைகளும், விரிவான செய்திகளைத் தக்கவர்கள்மூலம் திரட்டி வெளியிட்டுள்ளன. தவறான செய்திகளும் ஒரு சில பத்திரிகைகளில் வந்துள்ளன. காவல்துறையின் சார்பில் சீகாழி காவல்துறை ஆய்வாளர் திரு. சி. கருப்பையா அவர்கள் 'போலீஸ் அறிவிப்பு' ஒன்றை நாட்டின் பல்வேறு போலீஸ் நிலையங்களின் கவனத்திற்காக அச்சிட்டு அனுப்பியுள்ளார். இவ்வறிவிப்பில் காணமல்போன ஒன்பது நகைகளின் விபரமும், எடைகளும் குறிப்பிடப் பட்டுள்ளன. இது விபரம் இவ்விதழில் தனியே வெளியிடப் பட்டுள்ளது. மேலும் இக்களவுபற்றித் துப்புத் தருவோர்க்குத் தக்க சன்மானமும் வழங்கப்படும் எனவும் மேற்கண்ட

அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. களவுபோன நகைகள் பற்றித் துப்புக்கொடுப்பவர்களுக்குக் குருமகாசந்நிதானத்தின் உத்தரவுப்படி தக்க சன்மானம் வழங்கப்படும் என்று வேளூர் தேவஸ்தானத்திலிருந்தும் நாளிதழ்களில் விளம்பரம் செய்யப் பட்டுள்ளது.

## அமைதியாகச் சிந்தியுங்கள் :

இதற்கிடையில் ஆட்சிப்பொறுப்பில் உள்ள அமைச்சரவர் களும், சில அதிகாரிகளும், அரசியல் கட்சியைச் சார்ந்த அன்பர்களும் வெந்தபுண்ணில் வேல் நுழைப்பது போல் நாடாள்பவராலும், நாட்டுமக்களாலும் பாராட்டிப் போற்றி வந்துள்ள தருமையாதீன நிர்வாகத்தைக் குறைகூறி அரசியலாக்கு கிறுர்கள். இழப்புக்களால் வேதனையுற்றிருக்கும் நேரத்தில் அனைவரும் உணர்ச்சிவயப்படாது, இழந்தவற்றை மீட்க உரிய வாறு முயற்சி மேற்கொள்வதே சால்புடையது. பாரம்பரியமாக, இத்திருக்கோயில்களைப் பல்வேறு சிக்கல்களிலிருந்தெல்லாம் மீட்டுப் போற்றிப் புரந்து வரும் கண்ணியமிக்க ஒரு பெரிய சமய நிறுவனத்தை உணர்ச்சிப்போக்கில் விமர்சிப்பது முறை யானதுதானு என்பதனைச் சம்பந்தப்பட்டவர்கள் அமைதியாகச் சிந்திக்கவேண்டுகின்றேம்.

## பயனுள்ள தகவலுக்குப் பரிசு :

ஆதீனத் திருக்கோயில்களில் உள்ள அனைத்துத் திருவா பரணங்களும், இந்து சமய அறநிலையத்துறையினைச் சார்ந்த நகை சரிபார்க்கும் அதிகாரிகளால் அவ்வப்போது, எடை சரி பார்க்கப்பட்டு, மதிப்பீடு செய்யப்பட்டு வருகின்றன. வேளூர் தேவஸ்தான் நகைகளும் இவ்வரறே அடிக்கடி சரிபார்க்கப் பெற்று வருகின்றன. களவுபோன சூழ்நிலை பற்றிய விபரம் காவல் துறையினர்க்கு அறிவிக்கப்பெற்றுள்ளது. செய்தித்தாள்களிலும் இவை பிரசுரமாகியுள்ளன.

இப்போது உண்மையான அக்கறை உடையவர்கள் காணுமல் போன நகைகளைக் காலதாமதமின்றி மீட்பதில் தங்கள் நேரத்தையும், செல்வாக்கையும் பயன்படுத்துவதே செய்யத்தக்கது. புள்ளிருக்குவேளூர் ஸ்ரீ தையனுயகிஉடனுகிய ஸ்ரீ வைத்தியநாதப்பெருமானையும் ஸ்ரீ செல்வமுத்துக்குமார சுவாமியையும் குலதெய்வமாகக்கொண்டு போற்றும் லட்சக் கணக்கான பக்தர்கள் நாட்டில் உள்ளனர். இவர்களுக்கு இக் கோயில் திருவாபரணங்கள் விரைவில் கிடைத்திடவேண்டும்.

என்றநல்லெண்ணம் உண்டு. நமது தெய்விகக்கலைச் செல்வங்களைப் பாதுகாக்கும் பொறுப்புமிக்க அன்பர்கள் இக்களவு பற்றித் தங்களுக்குக்கிடைக்கும் தகவல்கள்யாதாயினும்அதனை உடன் ஆதீனத்திற்கோ, வேளூர் தேவஸ்தானத்திற்கோ, அன்றிக் காவல்துறையினருக்கோ தெரிவிக்க வேண்டுகின்றோம். பயனுள்ள தகவல் தருவோர்க்கு உரிய வெகுமதி வழங்கப்படும். வேதனைதீர - வேளூர் இறைவன் திருவாபரணங்கள் ஒன்பதும் விரைவில் கிடைத்திட வினைதீர்க்கும் வேளூர்ப் பெருமானிடம் பிரார்த்திக்கின்றோம். அனைவரும் பிரார்த்திப்பீர்களாக.

தங்கத் திருவா பரணம் ஒன்பதும்
தங்கம் சிதையாது உடனே கிடைத்திட
பங்கப் பழிகள் பறந்துடன் நீங்கிட
எங்கும் நிறைந்த இறைவனை ஏத்துவோம்.

நிகழாண்டில்

## திருமுறைக் கலாநிதி

பட்டம் பெறுவோர்

திருக்கயிலாயபரம்பரைத் தருமபுர ஆதீனம் 1966 ஆம் ஆண்டிலிருந்து ஆண்டுதோறும் சீகாழி திருமுலைப்பால் திருவிழாவன்று ஒருவருக்கும், திருவாமூர் திருநாவுக்கரசு நாயனார் குருபூஜைத் திருவிழாவன்று மற்றொருவருக்கும் "**திருமுறைக் கலாநிதி**" என்ற பட்டம் அளித்துவரும் மரபையொட்டி இந்த ஆண்டும் சீகாழியில் 11—4—81 சனிக்கிழமையன்று தருமையாதீன ஓதுவாமூர்த்தி திரு. **S. திருநாவுக்கரசு தேசிகருக்கும்,** திருவாமூரில் 29-4-81 புதன்கிழமையன்று கும்பகோணம் "இசைநம்பி" திரு, **S. S. கல்யாணசுந்தர தேசிகருக்கும்** தருமையாதீனம் இருபத்தாறுவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் தங்கள் திருக்கரத்தால் 'திருமுறைக்கலாநிதி' என்ற பட்டம் பொறிக்கப்பட்ட பொற்பதக்கம் வழங்கி, பொன்னாடை போர்த்தி, பொற்கிழியும் ரூ. 1001 அளித்து ஆசி வழங்கியருளுவார்கள்.

உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்

26 ஆவது குருமகாசந்நிதானம்

## ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

திருச்சிராப்பள்ளி வானொலிநிலையம் நிகழ்த்திவரும் குறள்நெறியில் "அறவாழி அந்தணன்" என்ற குறள்பற்றி

வழங்கிய

# அருளுரை

10—9—1980

"அறனறிந்தேம் ஆன்ற பொருளறிந்தேம் இன்பின்
திறனறிந்தேம் வீடு தெளிந்தேம் — மறனெறிந்த
வாளார் நெடுமாற! வள்ளுவனார் தம்வாயால்
கேளா தனவெல்லாம் கேட்டு."

திருக்குறள் சீரியதொரு அறநூல் என்பது பலரும் அறிந்ததே. அதில் கூறப்பட்டுள்ள பொருள், இன்பம் என்பவைகளையும் திருவள்ளுவர் அறத்தின் வழியிலேயே அமைத்துக் கூறியுள்ளார். அதுபற்றியே, முப்பால்களையுடைய திருக்குறளை "அறநூல்" என்றே குறிப்பிடும் வழக்கம் உளதாயிற்று. அதனால் திருவள்ளுவருக்கு அறத்தின்கண் இருந்த ஆராவேட்கை நன்கு புலப்படும்.

கடவுள்வாழ்த்தில் - கடவுளைப் பல வடிவுகளில் கண்ட திருவள்ளுவர் ஓர்குறளில் அறத்தின் வடிவிலேயே காணுகிறார். அதனால், இறைவனை அவர் அறக்கடலாக உருவகம் செய்கின்றார். அறக்கடல் என்பது பல்வேறு வகைப்பட்ட அறங்கள் எல்லாவற்றையும் தன்னுள் அடக்கி, அவையனைத்தின் வடிவமாகவும் இறைவன் நிற்கின்றான் என்பதனைக் குறிக்கும். இவ்வகையில் இறைவனை அற ஆழி - அறக்கடல் என்றே கூறிய திருவள்ளுவர், அதன்பின் "அந்தணன்"-

என்றும் அவனைக்குறிப்பிடுகிறார். அந்தணன்: அம் – தண்ணன்; அஃதாவது அழகிய தண்மையை உடையவன் என்பதாகும். தண்மை – குளிர்ச்சி. அஃது இங்கு, அருள். அதாவது கருணை என்பதைக் குறிக்கும். அழகு என்பது, இங்கு, எந்த உயிரிடத்தும் விருப்பு வெறுப்பு பாராட்டாது ஒருதன்மையாகவே நினைக்கின்ற நடுவுநிலைமையைக் குறிக்கும். எனவே, அந்தணன் என்பது எல்லா உயிர்கள்மீதும் சிறந்தகருணையை உடையவன் எனக் காரணப்பெயராக வந்துள்ளது. எவர்அழகிய தண்ணளியால் அழகுபெற்றவர்களோ அவர்களையெல்லாம் அந்தணன் என்றசொல் குறிக்கிறது. எனினும் உண்மையில் இறைவனுக்கே அப்பெயர் பொருந்தும் என்பதைத் திருவள்ளுவர் குறிக்கிறார்.

அறமே வடிவானவன் இறைவன் – அழகிய கருணையே வடிவானவன் இறைவன் என்று இருபெயர்களால் இறையிலக்கணத்தை இங்கே திருவள்ளுவர் குறித்திருப்பதை அறிகின்றோம். இக்குறள்மட்டும் இரண்டு பெயர்களை இறைவனுக்குச் சூட்டுவது ஒருசிறப்பு. கடலில் மூழ்கச் செல்கின்றவர்கள் அதில் எத்துணையோ பகுதியான துறைகளில் ஒரு இடத்தில்தான் மூழ்கமுடியும். அதுபோல அறக்கடலாகிய இறைவனைச் சேர்கின்றவர்களும் அவனது கருணையாகிய திருவடிகளைத்தான் சேரமுடியும் என்பதனையே சேர்ந்தார் என்று குறிப்பிடுகின்றார்.

கடலில் மூழ்கியவர்கள் அக்கடல்நீரால் வெப்பம் நீங்கிக் குளிர்ச்சியடைவர். அதுபோல அறக்கடலும் அந்தணனும் ஆகிய இறைவனை அடைந்தோரும் பாவத்தினின்றும் அதனாலாகிய துன்பத்தினின்றும்நீங்கி இன்புறுவர். இதனையே "பிற ஆழி நீந்தல்" என்று திருவள்ளுவர் குறிப்பிடுகின்றார். பிற என்பது மற்றப்பொருளும் இன்பமும் ஆகும். பொருளும் இன்பமுமாகிய இவைகளும் கடல்களே. மக்கள் பலரும் இந்த இரு கடல்களில் அகப்பட்டுக் கரையேற இயலாமல் அழுந்துகின்றனர். ஆனால் அவ்விடர்ப்பாடு நீங்குதற்கு உரிய ஒரேவழி இறைவனுடைய திருவடியைச் சேர்தல் என்பதுதான் என வலியுறுத்துவதற்கே இங்கும் திருவள்ளுவர் எதிர்மறையிலேயே தமது குறளை அமைக்கின்றார். அக்குறளைக் காண்போம்.

அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க் கல்லால்
பிறஆழி நீந்தல் அரிது.

# தலப் பெயர்களில் கவிப் புனைவுகள்

சித்தாந்தப் புலவர்மணி,

**திரு. ந. ரா. முருகவேள் M. A., M. O. L.**

**முன்னுரை :**

தமிழ்நாடு எண்ணிறந்த தலங்கள் நிறைந்தது. பழமையும் பெருமையும் வாய்ந்த எண்ணிறந்த தலங்கள், தமிழ்நாட்டிற் போல இத்துணை மிகுதியாக வேறு எங்கணும் இல்லை என்றே கூறலாம். தமிழ்மக்களின் சமய - சமுதாயத் துறைகளிலும், கலையியல் - பொருளியல் துறைகளிலும் தலங்கள் சிறப்பிடம் பெற்றுத் திகழ்கின்றன. தலங்களை இறைவனின் திருவருள் விளங்கிப்பெருகும் "ஆற்றல் ஊற்றகங்கள்" என்றே கூறலாம். ஒவ்வொரு தலத்திற்கும் ஏதேனும் குறிப்பிட்ட தனிச்சிறப்பும், தெய்விகப் பெருமையும் அமைந்து திகழக் காண்கின்றோம். அதனால்தான் வாழையடி வாழையாகவும், பன்னூற்றுக்கணக்கான ஆண்டுகளாகவும், இறைவன் எழுந்தருளி விளங்கும் இத்திருத்தலங்கள் பலவும், மக்களின்உள்ளங்களைக் கவர்ந்து கொள்ளைகொண்டு, அவர்களின் மதிப்பிற்கும் வழிபாட்டிற்கும் உரியனவாகப் பெருமையுற்றுத் தொன்றுதொட்டுப் பிறங்கி வருகின்றன.

**பெருங்கவிஞர் மீனாட்சிசுந்தரம்பிள்ளை :**

தலங்களின் பெயர்களை, அவற்றின் சிறப்புடைமையும் அருமையும் கருதி, புலவர் பெருமக்கள் பலர், தத்தம் கவிதை நூல்களில் இடம் பொருள்களுக்கு ஏற்றபெற்றி போற்றிக் குறித்துப் பல அற்புதக் கருத்துக்களை அமைத்து, அழகிய கவிதைகள் பாடியுள்ளனர். அவர்களுள் திருவாவடுதுறை ஆதீன மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்களும், சிறப்பாகக் குறிப்பிடத்தக்க ஒருவராவர்.

இறைவன்பால் தம்முடைய குறைகளையும் குற்றங்களையும் முறையிட்டுக்கொண்டு, தம்மையும் அருள்செய்து காத்தருளல் வேண்டுமென விண்ணப்பித்துக்கொள்ளும் முறையில் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் பல தலங்களின்

பெயர்களைச் சொற்பொருட் சுவைநலம் விளங்கப் பின்வருமாறு பாடியருள்கின்றார்.

(1) இறைவனே நீ எழுந்தருளி விளங்குகின்ற காஞ்சி என்னும்தலத்தை அடைந்து, உன்னை நான் பணியமாட்டேன்; காஞ்சி என்னும் அணிகலன் விளங்குகின்ற மகளிரின் இடைப் பகுதியினையே பெரிதும் விரும்பி அடைய முயலுவேன்.

(2) மதுரை மாநகரமாகிய மாட்சிமை மிக்க கூடல் என்னும் தலத்தையான் விரும்புவதில்லை; பெண்களோடுசேரும் புணர்ச்சி ஆகிய கூடலையே பெரிதும் விரும்பி விழைவுறுவேன்.

(3) என்னுடைய மனமானது என்றும் மெய் வாய் கண் மூக்குச் செவி என்னும் ஐயாற்றையே (ஐந்து வழிகளையே) விரும்பிச் செல்லும்; உன்னுடைய ஒப்பற்ற திருவையாறு என்னும் தலத்தை அஃது ஒருபோதும் விரும்புவதில்லை. யான் உயர் தில்லை சென்று தரிசித்தது இல்லை.

(4) மறைவனம் என்னும் வேதாரண்யமாகிய தலமானது, கொடிய பாவியாகிய என் விழிகளுக்கு மறைகின்ற வனமாகவே விளங்குகின்றது.

(5) மாதங்கவனம் என்னும் திருவானைக்கா ஆகிய தலத்தை, யான் சிறிதும் சிந்திக்க மாட்டேன். ஆனல் மாது-அங்க-வனம் (பெண்களுடைய உறுப்பின் அழகு) பற்றியே, இடைவிடாமல் நினைத்துக் கொண்டிருப்பேன். (மாதங்கம்-யானை).

(6) திருக்கோலக்கா என்னும் தலத்திற்கு வந்து உன்னை வணங்க மாட்டேன்; வீணை அழகிய சோலைகள்(கோலம் - கா) தோறும் சென்று சுற்றித் திரிந்துகொண்டிருப்பேன்.

(7) விருப்பங்கொண்டு திருநள்ளாறுஎன்னும்தலத்திற்குப் போகமாட்டேன்; என்னை மயக்க விரும்பினள் ஆறு (காதலியின் சொல்வழியில்) நடப்பதற்கே பெரிதும் அலைவேன்.

(8) திருவாஞ்சியம் என்னும் சிவதலத்தை, நாங்கள் ஒரு பொழுதும் வாஞ்சியம் (விரும்ப மாட்டோம்).

(9) உடலின் பரம்-குன்ற (சுமை குறையும்படி), உன்னுடைய திருப்பரங்குன்றம் என்னும் தலத்திற்கு வந்து ஒரு பொழுதும் உன்னை வணங்கித் தொழமாட்டேன்.

(10) திருக்கருவூர் என்னும் தலத்தின்மீது விடுதற்கரிய ஆசைகொண்டு வணங்குதற்குப் புறப்படமாட்டேன்; ஆனல் கருவானது ஊர்ந்து செல்கின்ற விடர்க்கு (பிளவு இடத்திற்கு)ப் பெரிதும் ஆசைகொண்டு இருப்பேன்.

(11) வேய்வனம் ஆகிய திருநெல்வேலி என்னும் திருத் தலத்தினை, யான் வணங்குவதற்குச் சென்று அடையேன்; பெண்களின் தொடி அணிந்த தோள்களாகிய வேய்வனத் தினையே (மூங்கில் காட்டினையே) அடைவேன்.

(12) சான்ருேர்கள் தியானிக்கின்ற திருவலஞ்சுழி என்னும் தலத்தினைத் தியானிக்கமாட்டேன்; பெண்களின் உந்தி (கொப் பூழ்) ஆகிய வலஞ்சுழியினையே நான்நினைத்துக்கொண்டிருந்து உழல்வேன்.

(13) பெண்களுடைய கூந்தலாகிய கருங்காடு ஒன்றையே பெரிதாக மதித்து, நின்னுடைய சிறந்த தலங்களாகிய கழைப் பசுங்காடு (திருநெல்வேலி), செங்காடு (திருச்செங்காட் டங்குடி), வெண்காடு (சுவேதாரண்யம்) முதலியனவற்றை மனத்தில் மதிக்காமல் திரிந்துகொண்டிருப்பேன்.

(14) கயிலைக்குன்றம், கொடுங்குன்றம் (பிரான்மலை), கழுக்குன்றம் முதலிய தலங்களாகிய குன்றங்களை நினையாமல், மகளிர் முலைக்குன்றம் ஒன்றையே குறித்து நினைத்துக்கொண் டிருப்பேன்.

(15) பெண்களோடு சேர்ந்துகூடுகின்ற பஞ்சணைப்பள்ளி (பஞ்சு மெத்தைப்படுக்கை) ஒன்றை விரும்பி, உன்னுடைய அகத்தியான்பள்ளி, திருக்காட்டுப்பள்ளி, அரப்பள்ளி, திருச் சிராப்பள்ளி முதலிய தலங்களை யான் விரும்புவதில்லை.

(16) என்னுடைய மனமானது பெரிதும் துடிதுடித்து விரும்பிச் சோற்றுத்துறையிலேயே (சாப்பாட்டு வழியிலேயே) எப்போதும் செல்லும்; அதனைவிட்டு உன்னுடைய திருச் சோற்றுத்துறை என்னும் தலத்தின் வழியே ஒருபோதும் சென்று உய்யாது.

இப் பகுதிகளில், பெருங்கவிஞர் மீனுட்சிசுந்தரம்பிள்ளை அவர்கள் தமது சிறந்த புலமைத் திறனல், பொருள்நயம் பொலியத் தலப்பெயர்ச் சொற்ருெடர்களைத் தகவறிந்து கையாண்டுள்ள சதுரப்பாடு, மிக வியந்து போற்றுதற்குரியதாக

விளங்குகின்றது. மேலும் தலவழிபாடு புரிவதிலும், தலங்களின் சிறப்பை அறிந்து விளக்கிப் பாடுவதிலும், அவர்கள் கொண்டிருந்த எல்லையற்ற பக்தியும், ஈடுபாடுங்கூட இனிது புலனுகின்றன.

**முடிவுரை :**

இங்ஙனம் சான்றோர்கள் பற்பலரும் போற்றிப் புகழ்ந்து துதிக்கும்வண்ணம், இணையற்ற மாபெருஞ் சிறப்புடையனவாக, எத்தனையோ பல சைவ வைணவத் தலங்கள், நம்முடைய தமிழகத்தில் செம்மையுற அமைந்து திகழ்ந்துவருகின்றன. அவைகளுக்கெல்லாம் சென்று தரிசித்து மகிழ்வது, நாம் நம் வாழ்க்கையில் இன்றியமையாது பெறுதற்குரிய பேறுகளுள் ஒன்றாகும். அப்பெறலரும் பேற்றினை, இயன்றபொழுதெல்லாம் இயன்ற அளவெல்லாம் பெறுதற்கு முயன்று, நாம் நலங்கள் பலவும் எய்துவோமாக!

மனிதன் ஒருவன் எய்துதற்காம் வாழ்வின் நலங்கள்பலவற்றுள்,
புனித நமது பாரதத்திற் பொலியும், சைவ வைணவமாம்
இனிய தலங்கள், கண்டுதொழும் இன்பிற்சிறந்த தொன்றில்லை!
நனி நன்றுயர்ந்தஅப்பேற்றை,நலமேஅடையமுயன்றுய்வோம்!

---

## தருமையாதீனத்தில்

## ஸ்ரீ குருஞானசம்பந்தர் குருபூஜை விழா

தருமையாதீன முதற்குரவர் ஸ்ரீ குருஞானசம்பந்தர் குருபூஜைவிழாவையொட்டி அவர்கள் ஜீவசமாதிகூடிய ஸ்ரீஞானம்பிகை உடனுகிய ஸ்ரீ ஞானபுரீசுவர சுவாமி திருக்கோயில் மகோற்சவம் 15—5—81 முதல் 24—5—81 வரை பத்து நாட்கள் நடைபெறும். அந்நாட்களில் திருநெறிய தெய்வத்தமிழ் மாநாடு நிகழும். அறிஞர்கள்பலர் சாத்திர – தோத்திர – இலக்கியச் சொற்பொழிவுகள் நிகழ்த்துவார்கள். 24—5—81 ஞாயிற்றுக்கிழமையன்று ஸ்ரீ குருஞானசம்பந்தர் குருபூஜை விழாவும், மறுநாள் 25—5—81 திங்கட்கிழமை பட்டணப்பிரவேசமும் நிகழும்.

## வேளூர் ( வைத்தீசுவரன்கோயில் )

## அருள்மிகு தையல்நாயகி உடனுகிய

## அருள்மிகு வைத்தியநாதசுவாமி தேவஸ்தானத்தில்

## 3—3—81 அன்று

# களவுபோன தங்க நகைகளின் விபரம்

| எண் | நகையின் விபரம் | எடைகிராம் |
|---|---|---|
| 1. | பவுன் மாலை அரை பவுன் 27, பிராங்காசு 5, மோகரா 1, நடுவில் சிங்கப்பூக்கள் 33, முகப்பு உள்பட முகப்பில் பவழம் 1, பவுன் மடிக்கன் கம்பியில் கோர்த்தது. | 300—348 |
| 2. | ½ பவுன் 70, சிங்கத்தலை 72, 'தருமபுரம் ஆதீனம் சச்சிதானந்த தேசிகர் சதாசேவை வாலாம்பிகை திருவடி வாழ்க' என்று வரையப்பட்டிருக்கிற பவுன் பொட்டு 1 உள்ள காசுமாலை பவுன் மடிக்கன் கம்பியில் கோர்த்தது. | 625—482 |
| 3. | ½ பவுன் மாலை 1 க்கு ½ பவுன் 60. சிங்கப்பூ 62. மோகரா 1 சங்கிலி உள்பட | 539—460 |
| 4. | தங்கக்குண்டு வைத்த கோட்டை முழுப்பவுன் 2, கோட்டை ½ பவுன் 26, குதிரை ½ பவுன் 2. புலி நகம் தங்கக்குவளை கட்டியது மேற்படி நகத்தின் நுனியிலும் மத்தியிலும் தொங்க கல் 3 க்கு பவுன் சலங்கைகள் 13 குஞ்சகம்பி கயிற்றில்கோர்த்தது உள்பட 4. | 192—456 |
| 5. | பொன் சந்திரஹாரம் 10 வடம் உள்ளது. | 637—146 |
| 6. | பொன் சந்திரஹாரம் 8 வடம் உள்ளது. | 468—160 |
| 7. | பூணூல் மூன்று சரம் ( பவுன் ) முகப்பு உள்பட 1. | 177—876 |
| 8. | பொன் வில்வக்கிளை மாலை 1, வில்வக்கிளை 83, இருக்குபூ 84, இரட்டை வடம் பொன்சரட்டில் கோர்த்தது. பொன் சரடு 3½ பிடியுள்ளது. | 333—882 |
| 9. | பவுன் பிடிசரமணி 3 வடம் உள்ளது. பெரிய மணி 1, குப்பி 1, சின்ன மணி 144 கயிற்றில் கோர்த்தது. | 113—724 |

**தக்க தகவல் கொடுப்பவர்களுக்குத்**

**தக்க சன்மானம் வழங்கப்படும்.**

தருமையாதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம்

**ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்**

வழங்கியருளிய

# புத்தாண்டு ஆசிச்செய்தி

"பழையன கழிதலும், புதியன புகுதலும் வழுவல்" என்பார் இலக்கண நூலார். ரௌத்திரி ஆண்டு நிறைந்து துன்மதி புத்தாண்டு பிறக்கின்றது. பழையன கழிதல் என்பது மொழி வரலாற்றில் தேவையானதே. ஆனல் சமூகத்தில் நம் முன்னேர் போற்றி வளர்த்த பக்தி, பண்பாடு, நல்லறங்கள் முதலியன என்றும் புதுமைப்பொலிவோடு நம்மைப் பாதுகாக்கும் சிறப்பின. நாகரிகமாற்றம் என்பது ஓரளவு நடை, உடை, பாவனைகளில் அமையலாம். நமக்கே உரிய பாரம்பரியப் பண்புகளை விட்டுவிடுதல் நன்றன்று. 'தமிழன் என்ருேர் இனமுண்டு; தனியே அவற்கோர் குணமுண்டு; அமிழ்தம் அவனது மொழியாகும்; அன்பே அவனது வழியாகும்' என்று பாடினர் தற்காலக் கவிஞர். இந்தப் பாரம்பரியப் பண்பாடுகள் மறவாது போற்றப்படவேண்டும். உலகில் பதட்டமும், போர்க்குமுறல்களும், கடும் வரட்சியும் நிலவும்நேரத்தில் புத்தாண்டு பிறக்கின்றது.

நாம் வளமையில் வாழ்வதற்கும், வரட்சியில் வாடுதற்கும் நமது எண்ணங்களும் செயல்களுமே காரணங்களாகின்றன. "பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும், தத்தம் கருமமே கட்டளைக்கல்" என்பார் திருவள்ளுவர். உள்ளத்தில் உண்மையும், வாக்கில் வாய்மையும், உடலில் மெய்மையும் துலங்குதல் வேண்டும். "உள்ளத்தில் உண்மையொளி உண்டாகில் வாக்கினிலே ஒளியுண்டாகும்" எனப் பாரதியாரும் இதனை வற்புறுத்தினர். யாவும்இறைவன் உடைமை; நாம் அவன்ஏவல் வழிச் செயற்படப் பணிக்கப்பட்டுள்ளோம் என்ற எண்ணம் நம்மிடையே உருவாகிவிட்டால் பலசிக்கல்கள் தாமே அகன்று விடும். மனிதமுயற்சிகளில் இறையருளும் கலந்திருக்கிறது என்பதை உணர்ந்தால் எல்லாத் துன்பங்களும் நீங்கும். அன்பு, அடக்கம், ஈகை, ஒழுக்கம் முதலிய உயர் குணங்கள் மக்களிடையே வளர்வது இன்றியமையாதது. "நல்லது செய்தல் ஆற்றீராயினும் அல்லது செய்தல் ஓம்புமின்" என்ற சான்ருேர் அறவுரை நினைந்து போற்றத்தக்கது. இதனைத் தனிமனிதனும், சமுதாயமும், அரசும் சிந்தித்துச் செயற்படுதல் நல்லது. துன்மதி ஆண்டில் அனைவர்க்கும் நன்மதி பிறக்கவும், பசியும் பிணியும் நீங்கி நாட்டில் வசியும் வளனும் சுரக்கவும் செந்தமிழ்ச்சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்ருேம்.

திருவாமூரில்

அருள்மிகு திருநாவுக்கரசு சுவாமிகள்

# குருபூஜை விழா

---

தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் திருவுளப்பாங்கின் வண்ணம் வழக்கம்போல் சித்திரைச் சதயத் திருநாளை முன்னிட்டு இவ்வாண்டு ஏப்ரல் 27, 28, 29 திங்கள், செவ்வாய், புதன் ஆகிய மூன்றுநாட்களிலும் திருநாவுக்கரசு சுவாமிகள் அவதாரத்தலமாகிய திருவாமூரில் குருபூஜைவிழா மிகச் சிறப்பாக நடைபெற விழாக்குழுவினர் ஏற்பாடுகள் செய்துள்ளனர்.

**பாதயாத்திரை :**

திருவாமூர் பாதயாத்திரைக் குழுவின் தலைவர் திரு. S. மங்களசிவம் பிள்ளை B. Com, அவர்கள் தலைமையில் 22—4—81 புதன்கிழமை காலை 7–30 மணியளவில் சிதம்பரம் ஸ்ரீ நடராசர் கோயில் ஸ்ரீ கற்பகவிநாயகர் சந்நிதியிலிருந்து பாதயாத்திரை தொடங்க இருக்கிறது. அப்போதுதிருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசாமித்தம்பிரான் சுவாமிகள் பாதயாத்திரையைத் தொடங்கிவைத்து அருளுரை வழங்குவார் கள். பாதயாத்திரை செல்லுகின்ற ஆறுநாட்களிலும் இடைவழி களில் ஆங்காங்கு அன்பர்கள்பலர் பகல் மாகேசுவரபூஜையும், காலை இரவு உணவும் அன்போடு செய்து வைக்கிறார்கள். முதனாள் திரு. ஆ. மங்கலமுடையார் எம். ஏ., எம். எஸ்ஸி 'அப்பரின் அடிச்சுவட்டில்' என்பது பற்றியும், 2 ஆம் நாள் பின்னலூர் வழிபாட்டில் திரு. வை. ஆறுமுகம் பிள்ளை 'திருநின்ற செம்மை' என்பதுபற்றியும், 3 ஆம் நாள் வடலூர் வழிபாட்டில் திரு. பி. சிவப்பிரகாசம் எம். ஏ. 'அறந்தரு நாவுக் கரசு' என்பதுபற்றியும், 4ஆம்நாள் காடாம்புலியூர் வழிபாட்டில் திரு. த. அகரமுதல்வன் எம். ஏ. 'குறிக்கோளிலாது கெட்டேன்' என்பதுபற்றியும் விரிவுரைகள் நிகழ்த்துவார்கள். 5 ஆம் நாள்

மாலை திருவதிகை அப்பர்சுவாமிகள் படிக்காசுபெற்ற திருவிழாவில் கலந்துகொள்கிருர்கள். 6 ஆம்நாள் திருவாமூரில் ஸ்ரீபசுபதீசுவரர் திருக்கோயிலில் வழிபாடு நிகழும்.

## அப்பர்தேவார அருந்தமிழ் மாநாடு :

திருவாமூரில் நிகழும் குருபூஜைவிழாவை முன்னிட்டு மூன்று நாட்களிலும் அப்பர்தேவார அருந்தமிழ்மாநாடு நிகழ இருக்கிறது. மேமீ 27உ மாலை தவத்திரு ஊரன்அடிகள், 28உ காலை திருக்குறளார் திரு. வீ. முனுசாமி, மாலை தவத்திரு குன்றக்குடி அடிகளார், 29உ மாலை மாண்புமிகு நீதிபதி. N கிருஷ்ணசாமிரெட்டியார் ஆகியோர்தலைமைதாங்கிச் சிறப்பிக்கிருர்கள். திருமுறைவாணர்கள் திருமுறைஇசையரங்கு நிகழ்த்துகிருர்கள். கருத்தரங்கம், பண்ணுராய்ச்சி, வழக்காடுமன்றம் முதலிய சிறப்பு நிகழ்ச்சிகளில் புலவர் பெருமக்கள் கலந்துகொள்கிருர்கள். இந்நாட்களில் ஸ்ரீ பசுபதீசுவரருக்கும், அப்பர் சுவாமிகளுக்கும் விசேஷ அபிஷேக ஆராதனைகள் நிகழும்,

ப்ாதயாத்திரையிலும் மாநாட்டிலும் நடைபெறும்திருமுறைப் பாராயணத்தில் சிறந்த திருமுறை இன்னிசை வாணர்களும், தருமையாதீன தேவஸ்தானங்களின் திருமுறைப்பணியாளர்களும், தருமையாதீனத் தேவாரப்பாடசாலை மாணவர்களும் கலந்துகொள்கிருர்கள். ஆங்காங்கு தக்கதுணைக்கருவிகளோடு பாராயணமும், இசையரங்குகளும் நிகழும்.

குருபூஜை நன்னுள் (29—4—81) அன்று தருமையாதீனம் 26 ஆவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் வழிபாட்டுக்கு எழுந்தருளி, குடந்தை இசைநம்பி. எஸ். எஸ். கல்யாணசுந்தர தேசிகர் அவர்களுக்குத் 'திருமுறைக்கலாநிதி' என்ற பட்டம் பொறிக்கப்பெற்ற பொற்பதக்கம் வழங்கிப் பொன்னுடை போர்த்தி, பொற்கிழியளித்து ஆசியருளுவார்கள்.

அன்பர்கள் பாதயாத்திரையிலும், குருபூஜை விழாவிலும் கலந்துகொண்டு தரிசித்தும் கேட்டும் இம்மை மறுமைப் பயன்களை எய்துவார்களாக.

---

# பார்வையாளர் குறிப்புகள்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்

## ஆர்சாள்புரம் ஸ்ரீ சிவலோகத்தியாகராஜசுவாமி தேவஸ்தானம்

தமிழ்நாடு தேவார ஓதுவாமூர்த்திகள் சங்கத்தைச் சேர்ந்த ஐம்பதுபேர்களைக்கொண்ட நாங்கள் இன்று திருநல்லூர்ப்பெருமணம் திருக்கோயிலைத் தரிசிக்கும் பாக்யத்தைப் பெற்றோம். திருக்கோயில் நன்றாகத் தூய்மையாக இருந்தது. சிவாசாரியார் நல்ல முறையில் திருவுருவங்கட்கு அலங்காரம் செய்துவைத்திருந்தார். தல ஓதுவாமூர்த்தி கண்ணீர் மல்க எங்களை வரவேற்று வழிபாடு செய்துவைத்தார். நாங்கள் நல்ல புண்ணியத்தைப்பெற்றவர்களாகத் திரும்பிச்செல்கிறோம்.

(ஒ-ம்) **சைதை தேவாரம் த. நடராஜன்**

தலைவர்,

2—3—81 தமிழ்நாடு தேவார ஓதுவாமூர்த்திகள் சங்கம்

*

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்

## குறுக்கை ஸ்ரீ வீரட்டேசுவரசுவாமி தேவஸ்தானம்


தருமபுர ஆதீனத்தின் கீழுள்ள இத்திருக்கோயிலைப் பார்வையிடவும், தரிசனம் செய்யவும் தலவிருட்சத்தினையும் தலவிருட்ச ஐதிகமான சிற்பத்தையும் புகைப்படம் எடுக்கவும் இன்று வாய்ப்பு ஏற்பட்டது. மேலாளர் அவர்கள் எங்களிடம் காட்டிய அன்பு மகிழ்ச்சியளித்தது. அவர்கள் செய்துதந்த ஏற்பாடுகளுக்கு என் நன்றி உரியது. இவர்கள் போன்ற அதிகாரிகளால் கோவிலுக்கு வருகிறவர்களின் எண்ணிக்கை பெருகும் என்று நம்புகிறேன்.

(ஒ-ம்) **K. K, சுந்தரசோபிதராஜ் M. A.**

ஆராய்ச்சி மாணவர்.

30—3—81. ராஜமோகன் சதனம், நாகர்கோயில்.


வைத்தீசுவரன்கோயிலில் 3—3—1981 அன்று களவுபோன தங்க நகைகளின் புகைப்படங்கள்.



1 2

1. பூணூல் – 3 சரம்


2. 32 காசுகொண்ட காசுமாலையும் டாலரும்



3 4

3. 70 காசு கொண்ட காசுமாலையும் டாலரும்


4. 60 காசு கொண்ட காசுமாலையும் டாலரும்



5 6

5. எட்டு வரிசை சந்திர ஹாரம்

6. பத்து வரிசை சந்திர ஹாரம்



7 8 9

7. 28 காசு கொண்ட காசுமாலையும் தங்கப் பூண்போட்ட புலிநகமும்
8. 83 தளம் கொண்ட வில்வதள மாலை
9. மூன்று வரிசை கொண்ட, பிடி சரமணி மாலை

# திருநாகைக்காரோணத் தலச்சிறப்பு

தருமையாதீனத் தமிழ்ப்புலவர், திருவாசக உரைமணி,

**வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர் எம், ஏ.,**

தஞ்சை மாவட்டம் ஆட்சிமுறைகட்கு வசதியாகக் கீழைத் தஞ்சை மேலைத்தஞ்சை என இரண்டாகப் பிரிக்கப்பட்டுள்ளது. கீழைத்தஞ்சையின் தலைமையிடமாக விளங்குவது நாகப் பட்டினம். தமிழ்நாட்டின் கீழைக்கடற்கரையை அடுத்துள்ள இவ்வூர் தாலுக்காவின் தலைநகராகவும், ஏற்றுமதி இறக்குமதி செய்யப்படும் துறைமுகமாகவும் விளங்குகிறது. மாவட்ட நீதி மன்றம், வட்ட நடுவர் நீதிமன்றம், பத்திரப் பதிவுநிலையம், தபால் தந்தி அஞ்சல் நிலையம், கோட்டாட்சியர் அலுவலகம், நகராட்சி அலுவலகம், வருமானவரி நிலையம், காவல்துறை அலுவலகம், சுங்கநிலையம், அறநிலையப்பாதுகாப்புத் துணை ஆணையர் அலுவலகம் முதலிய அரசு அலுவலகங்களும், பாங்குகள், கல்லூரிகள், உயர்பள்ளிகள், தொழிற்பயிற்சிக் கல்லூரிகள் முதலிய கல்வி நிலையங்களும், சிறுதொழிற்சாலைகளும் இந்நகரில் உள்ளன.

## வழி :

தமிழ்நாட்டின் பெரிய நகரங்களில் ஒன்ருய்விளங்கும் இவ்வூர், தஞ்சை – நாகூர் செல்லும் இருப்புப்பாதையில் உள்ளது. மாயூரம், திருவாரூர், திருத்துறைப்பூண்டி, நன்னிலம், பொறையாறு, காரைக்கால், கும்பகோணம், பட்டுக்கோட்டை முதலிய இடங்களிலிருந்து பேருந்துகளிலும் செல்லலாம். சென்னை, கோவை முதலிய பெரிய நகர்களிலிருந்து விரைவுப் பேருந்துகளும் செல்கின்றன.

இரயில், பேருந்து நிலையங்களிலிருந்து வடக்கே 1 கி. மீ. தூரத்தில் கோயில் உள்ளது. கோயில் சென்னை இந்துசமய அறநிலையத்துறையின் நேர்நிர்வாகத்தில் உள்ளது.

## வரலாற்றுச் சிறப்பு :

நாகை, சோழநாட்டின் மிகச்சிறந்த துறைமுகங்களில் ஒன்ருய் விளங்கியதை இலக்கியங்களாலும் கல்வெட்டுக்களாலும் நாம் அறியலாம். சோழமன்னர்களின் தலைநகரங்களுள் ஒன்ருகவும் இவ்வூர் விளங்கியது. சோழமன்னரின் புதல்வர்கள்

கல்வி பயின்ற பள்ளியிருந்த இடம் சோழ வித்தியாபுரம் என வழங்குகிறது. நாகப்பட்டினத்துச் சோழன் பிலத்துவாரத்தால் நாகலோகம் சென்று நாககன்னியைப் கூடிப்பெற்ற புதல்வனே தொண்டைநாட்டை அரசாண்ட இளந்திரையன் எனப் பத்துப் பாட்டால் அறிகிறோம். நாகர்கள் எனப்படும் குடியினர் இவ் வூரில் குடியேறியிருந்தனர் என ஊர்ப்பெயராலும் நாம் அறிய லாம். குறுந்தொகைப் புலவர் ஒருவரின்பெயர் நன்னாகையார் எனக் கூறப்படுகிறது.

தமிழ்மன்னர் ஆட்சியில் உரோமானிய சீன வாணிபம் நாகைத்துறைவழியாக நடைபெற்றது. பிறநாட்டு வணிகர் களும் புத்தமதக் குருமார்களும் இங்குநிறைந்திருந்தனர். அசோகமன்னர் கட்டிய பதர திட்டவிகாரம் இங்கிருந்தது. பல்லவமன்னன் நரசிம்ம போத்தவர்மன் கி. பி. 720ல் சீன அரசன் விருப்பப்படி புத்த விகாரம் இரண்டு கட்டினான். கி. பி. 8 ஆம் நூற்றாண்டில் திருமங்கை ஆழ்வார் புத்தவிகாரக் கோயிலின் பொற்சிலையைக் கவர்ந்துவந்து திருவரங்கம் திருமதில் செய்வித்தார் எனக் கூறப்படுகிறது. இராசராச சோழன், இராசேந்திர சோழன் ஆகியோர் இரண்டு புத்தர் கோயில்களைக் கட்டினர். இராசராசன் கடாரத்தரசன் பெயரால் சூடாமணி பன்மவிகாரத்திற்கு ஆனைமங்கலம் கிராமத்தை வழங்கிய நிலக்கொடையை விரிவாக லெய்டன் செப்பேடு கூறுகிறது.

தமிழ்மன்னர் ஆட்சிக்குப்பின் நாயக்க - மராட்டியமன்னர் கள் ஆட்சி நடைபெற்றது. பின்னர், போர்ச்சுகீசியரும், டச்சுக்காரரும், ஆங்கிலேயரும் இந்த நகரைக் கைப்பற்றி அரசாண்டனர். 1799 – 1845 வரை நாகை தஞ்சைமாவட்டத்தின் தலைநகராக விளங்கிற்று.

## ஊரின்பெயரும் கோயிற்பெயரும் :

ஊரின்பெயர் நாகப்பட்டினம். நாகர்கள் என்ற வகுப்பினர் குடியேறி வாழ்ந்தாலும் கடற்கரையை அடுத்துள்ள ஊர்கள் பட்டினம் என்ற பெயரால் வழங்கப்பெறுதலால் ஊர் நாகப் பட்டினம் என்ற பெயர்பெற்றது. நாகப்பட்டினம் மரூஉ மொழியாக நாகை என வழங்கத் தொடங்கிற்று. அட்டநாகங் களில் ஆதிசேடன் பூசித்ததலம் ஆதலால் இப்பெயர் பெற்றது எனத் தலபுராணம் கூறுகிறது.

காரோணம் கோயிலின் பெயர். இப்பெயருடைய திருக் கோயில்கள் தமிழ்நாட்டில் மூன்று உள்ளன. ஒன்று நாகைக் காரோணம், பிறிதொன்று குடந்தைக்காரோணம், மூன்றாவது

கச்சிக்காரோணம். காய ஆரோகணம் என்பதன் திரிபே காரோணம் என்றுகொண்டு புண்டரீக முனிவரை இறைவன் தன் மேனியில் ஏற்றுக்கொண்ட தலமாதலால் இப்பெயர் எய்திற்று என்று தலபுராணம் கூறுகிறது. இறைவன் புண்டரீகமுனிவரைப் பூத உடலோடு வானுலகிற்கு ஆரோகணம் (ஏறச்செய்தல்) செய்வித்ததால் இப்பெயர் பெற்றதென்று திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியார் கூறுவர். திருவோணம் திருமாலுக்குரிய விண்மீன். கருநிறம்பொருந்திய திருமால் வழிபட்டதால் காரோணம் என்ற பெயரைப் பெற்றதென்று திரு. முத்து சு. மாணிக்கவாசக முதலியார் தருமையாதீன திருமுறை வெளியீட்டில் குறித்துள்ளார்.

ஆதிபுராணம், சிவராசதானி, பார்ப்பதீச்சரம், அரவநகரம் முதலிய பெயர்களும் இத்தலத்திற்கு உரியனவாகத் தலபுராணம் கூறுகிறது.

## தலப்பெருமை :

இத்தலம் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகிய மூவர் தேவாரத் திருப்பதிகங்களையும் பெற்றது. சோழ நாட்டுக் காவிரித் தென்கரைத் தலங்களில் 82 ஆவது தலம். நாகராஜனுன ஆதிசேடன் பூசித்துத் தன்பெயரை நிலைநாட்டியது. புண்டரீகமுனிவரை இறைவர் தன் திருமேனியோடு ஆரோகணம் செய்த சிறப்புடையது. சப்தவிடங்கத் தலங்களில் ஒன்று. அறுபத்துநான்கு சத்திபீடங்களுள் ஒன்ருய்த் திகழ்வது. காஞ்சி காமாட்சி, மதுரை மீனுட்சி, காசி விசாலாட்சி, நாகை நீலாயதாட்சி என இத்தல அம்பிகை மக்கள்வழக்கில் இணைந்து வழங்கப்பெறுகிருள். கயிலையும், காசியும்போல இத்தலம் முத்தி மண்டபத்தைப் பெற்றுள்ளது. அதிபத்தநாயனுர் அவதரித்த பெருமையுடையது. ஏழுமுனிவர்கட்கும் இறைவன் மூலலிங்கத்திலிருந்து தோன்றி சோமாஸ்கந்தராய்க் காட்சி கொடுத்தருளினுர். அகத்தியமுனிவருக்குத் திருமணக்கோலம் காட்டியருளினுர். சாலிசுகமன்னனுக்குத் திருமணக்கோலம் காட்டும் பஞ்சக்குரோச யாத்திரையாகிய சப்தஸ்தானவிழா நடைபெறுகிறது. தசரதன் சனிப்பிரதிட்டைசெய்து வழிபட்டது.

அம்பிகை, முருகன், திருமால், அகத்தியர், வசிட்டர், முசுகுந்தன், அரசகேசரி, விசித்திரகவசன், விருரகன், பத்திரசேனன், பாற்கரன், மித்திரன், காளகண்டன், சண்ட தருமன் முதலியோர் வழிபட்டு அருள்பெற்றுள்ளனர்.

## கோயிலமைப்பு :

நகரின் நடுவில் கோயில் கிழக்குநோக்கி அமைந்துள்ளது. இரண்டு பிராகாரங்கள் உள்ளன. நுழைவாயிலில் கட்டைக்

கோபுரம் பஞ்சமூர்த்திகளின் சுதைச் சிற்பங்களோடு விளங்குகிறது. அவ்வாயிலைக்கடந்து உள்ளேசென்ருல் முதலில் தனிக் கோயிலில் நாகாபரணப்பிள்ளையார் காட்சிதருகிருர். அடுத்துச் சுதையில் செய்த பெரிய நந்தி விளங்குகிருர். வடக்கே பந்தல் காட்சி மண்டபமும், பசுமடமும், தெற்கே முத்திமண்டபமும் தேவதீர்த்தமும் உள்ளன.

கோயிலின் முன்வாயிலைக்கடந்து சென்ருல் ஐந்துநிலைகளையுடைய சோழர் கோபுரம் காட்சிதரும். அவ்வாயிலைக் கடந்து சென்ருல் இரண்டாம்பிராகாரம். நடுவில் இராசதானிமண்டபம் உள்ளது. கிழக்கில் விநாயகர், பழனியாண்டவர், இடும்பன் சந்நிதிகளும், அதிபத்தர் கோயிலும் உள்ளன. தெற்கே மணி மண்டபம், நந்தவனம், கிணறு ஆகியனவும்; மேற்கே வல்லபை கணபதி, காளிகோயில்களும், மாமரமும், வீரபத்திரர்கோயிலும்; வடக்கே, ஆத்மநாதர் சந்நிதியும் வசந்த மண்டபமும் யாகசாலையுமுள்ளன. இராஜதானி மண்டபத்தை அடுத்துச் சுவாமி அம்பாளுக்குரிய கொடிமரங்களும் வடக்கே தெற்குநோக்கி அம்பாள் கோயிலும் உள்ளன.

அடுத்து மூன்றுநிலைகளைஉடைய இரண்டாம் கோபுரவாயில் உள்ளது. அவ்வாயிலில் செங்கழுநீர் விநாயகர் ஆறுமுகப் பெருமான் உள்ளனர். அதிகாரநந்தி, விநாயகர் ஆகியோரை வழிபட்டு முதற்பிராகாரத்தை நாம் வலம் வருவோம். வாயிலின் தெற்கே சூரியன் சுந்தரர் ஆகியோரும் தெற்கே திருமாளிகைப் பத்தியில் அறுபத்துமூவர்சமயாசாரியர் ஆகியோரும் உள்ளனர். மேற்கே மாவடிப்பிள்ளையார், கார்முகீசர், முருகப்பெருமான், கஜலக்ஷ்மி முதலிய மூர்த்திகள் விளங்குகின்றனர். வடக்கே தசரதன் தாபித்த சனிபகவான், நவக்கிரகங்கள் உள்ளனர். அடுத்து நடராஜர் மண்டபம் உள்ளது. கிழக்கே பைரவர், சந்திரன் உள்ளனர். சங்குமண்டப முன்தூண்களில் புண்டரீக முனிவர் சாலிசுகமன்னன் புடைப்பு உருவங்கள் உள்ளன. சங்கு மண்டபத்தில் காட்சி கொடுத்தவர், ஸ்ரீ நடராசர், பிக்ஷாடனர், அதிபத்தர் உற்சவவிக் கிரகங்கள் உள்ளன. மூலவரின் விமானத்தைச் சூழவுள்ள கோஷ்டங்களில் தெற்கே தக்ஷிணமூர்த்தி, மேற்கே இலிங்கோத்பவர், வடக்கே பிரமன், அர்த்தநாரீசுவரர், துர்க்கை, பிக்ஷாடனர் ஆகியோர் உள்ளனர்.

கோயில் இரு பகுதியாக, தெற்கே தியாகேசர் சந்நிதியும், வடக்கே காயாரோகணர் சந்நிதியும் கிழக்கு நோக்கி விளங்குகிறது.

சங்கு மண்டபத்தை அடுத்து மகாமண்டபமும், அதனை அடுத்து அர்த்த மண்டபமும் உள்ளன. கருவறை வாயிலில் சோழர்காலக் கலைப்பாணியோடு துவாரபாலகர் விளங்குகின்றனர்.

காயாரோகணப் பெருமான் சிவலிங்கத் திருவுருவில் காட்சி தந்து நம் உள்ளங்களைக் கவரும் அற்புதமூர்த்தியாகத் திகழ்கிறார். பின்னால் தனிமாடத்தில் பெருமான் ஆணும் பெண்ணுமாய் அடியார்க்கு அருள் செய்யும் நிலையில் சோமாஸ்கந்தராகத் திருவுருக்கொண்டு விளங்குகின்றார். அவர் திருமுன்நின்று,

"செந்துவர் வாய்க்கருங் கண்ணிணை வெண்ணகைத்தேன் [மொழியார்
வந்து வலம்செய்து மாநடம் ஆட மலிந்த செல்வக்
கந்தம் மலிபொழில் சூழ்கடல் நாகைக் காரோணமென்று
சிந்தை செய்வாரைப் பிரியாது இருக்கும் திருமங்கையே"

என்ற திருப்பாடலை ஓதி வழிபடுவோம்.

மகாமண்டபத்தில் பஞ்சமுக விநாயகர், வில்லேந்திய முருகன், புண்டரீகமுனிவர் மற்றும் திருவுலாப்போதும் தெய்வத் திருவுருவங்களைத் தரிசித்து, அம்பாள் சந்நிதியை அடைவோம். அம்பாள் கோயில் தனிச்சிறப்போடு திகழ்கிறது. அழகுக்கு ஒருவரும் ஒவ்வாத வல்லியாய் அன்னை நீலாயதாக்ஷி விளங்குகின்றாள். அருகே ஆடிப்பூர அம்மன் சந்நிதி உள்ளது.

## பிறகோயில்கள்:

திருமங்கையாழ்வாரால் பாடப்பெற்ற 1. சௌந்தரராசப் பெருமாள்கோயில், 2. கிருஷ்ணன்கோயில், 3. மேலைக் காயாரோகணர்கோயில், 4. நாகநாதர்கோயில், 5. கோதண்ட ஐயனார்கோயில், 6. மெய்கண்டவேலவர்கோயில், 7. நடுவர் கோயில், 8. அழகியநாதர்கோயில், 9. நெல்லுக்கடைமாரியம்மன்கோயில், 10. அமரநந்தீசர்கோயில், 11. கைலாசநாதர் கோயில், 12. கட்டியப்பர்கோயில், 13. விசுவநாதர்கோயில் முதலிய பல கோயில்கள் இத்தலத்தைச் சூழ உள்ளன.

## சூழஉள்ள தலங்கள் :

சிக்கல், கீழ்வேளூர், தேவூர், எட்டுக்குடி, திருமருகல் திருச்சாத்தமங்கை ஆகிய பாடல்பெற்ற சிவதலங்கள் இத்தலத்திற்கு அருகில் உள்ளவை. மகமதியர்களின் கோயிலாகிய புகழ்பெற்ற நாகூர் இவ்வூருக்கு வடக்கே உள்ளது.

**மூர்த்திகள் :**

இத்தலத்து விநாயகர்களில் நாகாபரணவிநாயகரும் மாவடி விநாயகரும் மிக்க சிறப்புடைய மூர்த்திகளாவர். பெருமான் திருப்பெயர் அருள்மிகு காயாரோகணநாதர். ஆதிபுராணர், எனவும் வழங்கப்பெறுகின்ருர். அம்பிகை திருப்பெயர் அருள் மிகு நீலாயதாக்ஷி; நீலமலர் போன்ற கண்களை உடையவள் என்பது பொருள். தமிழில் கருந்தடங்கண்ணி எனப்பெறுவர். சுவாமி அம்பாள் பெயர்கள் தலத்தேவாரப் பதிகங்களில் குறிப் பிடப்படுகின்றன. தியாகராசர் சந்நிதியில் விளங்கும் விடங்கர் சுந்தரவிடங்கர் எனப்பெறுவார். தியாகராசரின் நடனம் தரங்க நடனமாகும். புண்டரீகமுனிவர், அதிபத்தர் திருவுருவங்கள் உள்ளன.

**தீர்த்தங்கள் :**

தீர்த்தங்கள் கோயிலுக்கு மேற்கில் உள்ள புண்டரீக தீர்த்தம், முத்திமண்டபத்துக்கு அருகில் உள்ள தேவதீர்த்தம், ஊருக்கு மேற்கே ஓடும் தேவநதி எனப்படும் உப்பனுறு, கடல் ஆகியன. இத்தலத்தின் சிறந்ததீர்த்மாகக் கடல் கருதப் படுகின்றது. ஆடி தை அமாவாசை நாட்கள், மாசிமகம், அதிபத்தர் திருவிழா நாட்களில் சுவாமிகடலில்தீர்த்தம் கொடுத் தருளுவார். தலமரம் மா.

**சிற்பங்கள் :**

இக்கோயிலின் மண்டபங்கள், மூர்த்திகள், திருவுலாப் போதும் விக்ரகங்கள் அனைத்தும் அழகிய வேலைப்பாடுகள் உடையவை. நாகாபரணப் பிள்ளையார் நாகபடங்களுடன் உள்ளார். ஆறுமுகக்கடவுள், அவர்தம் மண்டபத்திலுள்ள குதிரைவீரர் சிற்பங்கள், சிவராசதானி மண்டபத்தில் கல்சங்கிலி கள், உள்மண்டபத்திலுள்ள 12 ராசிகள், கொடுங்கைகள், யாளிகள் போன்ற அமைப்புடைய மண்டபம் ஆகியனவும், நந்தி, அகத்தியர், பிக்ஷாடனர், துர்க்கை, அர்த்தநாரீசுரர், புண்டரீகர் திருவுருவங்களும், பஞ்சமுகவிநாயகர் நீலாயதாக்ஷி திருவுருவங்களும் மிக்க வேலைப்பாடுகளோடு விளங்குவன. பீங்கான்ரதம் எனவழங்கும் கண்ணாடிரதம் மிக்க அழகுடையது.

**நாட்பூசையும் விழாக்களும் :**

ஆறுகால பூசைகள் இத்தலத்தில் நடைபெறுகின்றன. மாதந்தோறும் பிரதோஷ காலங்களில் பெருந்திரளான மக்கள் வந்து வழிபடுகின்றனர். ஒவ்வொரு மாதத்திலும் குறிப்பிடத் தக்க விசேஷ காலங்களில் சிறப்புவழிபாடுகள் நிகழ்கின்றன.

வைகாசியில் பிரமோற்சவமும், ஆடிப்பூரமும் சிறப்புடையன. ஆனிமாதம் கிருஷ்ண அட்டமியில் சப்தஸ்தான விழா நிகழ்கிறது.

## இலக்கியங்கள் :

இத் தலத்திற்குத் திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசர் சுந்தரர் அருளிய தேவாரத்திருப்பதிகங்கள் ஏழு உள்ளன. ஞானசம்பந்தர் இத்தலத்து மூலலிங்கப் பெருமான் உமையொரு பாகராய்க் காட்சி வழங்குவதைப் 'பெண் ஆண் என நின்ற பெம்மான்' 'ஆணும் பெண்ணுமாய் அடியார்க்கு அருள் நல்கி' என்ற தொடர்களால் குறித்தருள்கிருர், இத்தலத்தின் நெய்தல் நில மாண்பையும் நாகைக்கடல் துறையில் மலைகள் போன்ற பெரிய கப்பல்கள் வந்துசெல்வதையும் குறிப்பிட்டுள்ளார். திருநாவுக்கரசர், நாகைக்காரோணத்து இறைவனை வழிபட்டதால் வினைகள் நீங்கி உய்வடைந்த சிறப்பையும், பெருமானை வழிபடுவாரைத் திருமகள் பிரியாதிருப்பள் என்பதையும் அருளிச் செய்கிருர். திருத்தாண்டகத்துள் ஏனைய தலங்களில் உறையும் எல்லா இறைவர்களையும் இத்தலத்தில் காணலாம் எனக்கூறுகிருர். இத்தலத்து இறைவிபெயரைக் கருத்தடங்கண்ணி எனக் குறித்தருள்கிருர்.

சுந்தரர் நாகைக்காரோணம் வந்து தரிசித்து இரு மனைவியரோடு பெருவாழ்வுநடத்தவும், மூவேந்தர்களோடு உடனுக இருந்து வழிபடத்தக்க அரசு உடைமைகளாகிய முத்தாரம், வயிரமாலை, கஸ்தூரி, சாந்தம், பொற்கட்டி, குதிரை முதலிய சிறப்புக்களை நல்கவும் இறைவனை வேண்டிப் பதிகம்பாடிப் பெற்ருர். மற்றும் ஆரும் திருமுறை 13 ஆம் பதிகம் நான்காம் பாடல், 54 ஆம் பதிகம் ஆரும்பாடல், 70 ஆம் பதிகம் ஏழாம் பாடல், ஏழாந் திருமுறை 31 ஆம் பதிகம் நான்காம் பாடல், 39 ஆம் பதிகம் ஏழாம் பாடல் ஆகியவற்றிலும் இத்தலப் பெயர் குறிப்பிட பெற்றுள்ளது. பதினெராம் திருமுறையிலும் இத்தலத்தைப் பற்றிய பாடல்கள் உள்ளன. இத்தலத்து முருகன் மீது அருணகிரிநாதர் பாடிய திருப்புகழ் உள்ளது. மகாவித்துவான் மீனுட்சி சுந்தரம் பிள்ளை இயற்றிய நாகைக்காரோணப்புராணம் உள்ளது. திரு. பஞ்சநதம் பிள்ளை அவர்கள் எழுதிய தலவரலாறு உள்ளது. காளமேகப் புலவர் நாகையைப்பற்றிப் பாடிய பாடல்கள் தனிப்பாடல் நூலில் உள்ளன. கருந்திட்டைக்குடி சாமிநாதப் பிள்ளை எழுதிய நான்மணிமாலையும், அழகுமுத்துப் பிள்ளை பாடிய மெய்கண்டவேலர் திருப்புகழும் உள்ளன.

'கற்ருர்பயில் கடல் நாகைக்காரோணம்' என்பது ஞான சம்பந்தர் திருவாக்கு, காளமேகப்புலவர் இவ்வூருக்கு வந்த போது வீதியில் பாக்கு விளையாடும் பாலகர்களை நோக்கிப் பசியால் 'சோறு எங்கு விக்கும்' என்று கேட்டார். அச்சிறு வர்கள் தொண்டையில் விக்கும் என்று பதில் கூறினர். (விற்கும் என்பது பேச்சுவழக்கில் விக்கும் என வழங்குதலும் உண்டு.) புலவர் சிறுவர்மீது கோபித்து அவர்கள்மீது வசை பாடும்பொருட்டு வரைசுவரொன்றில் 'பாக்குத்தறித்து விளை யாடும் பாலகர்க்கு' என்று எழுதி நிறுத்திவிட்டு, பசிதீர்ந்து எஞ்சிய பகுதியைப்பாடி முடிப்போம் என்று சென்று, பசியாறி வந்து பார்க்கும்போது அப்பாடலின் இரண்டாமடி 'நாக்குத் தமிழுரைக்கும் நன்னுகை' என்று எழுதியிருப்பதைப் பார்த்து, சிறுவர்களின் கல்வியறிவை மெச்சிச் சென்ருர் என்பது தனிப் பாடல்திரட்டில் காணப்படும் வரலாறு.

## சப்தவிடங்கத்தலம் :

'நாகை ஏழு விடங்கத் தலங்களுள் ஒன்ருகும். முசுகுந்த சோழமன்னன் இந்திரனிடம் பெற்றுவந்த ஏழு தியாகேசர் திரு வுருவங்களையும் விடங்கச் சிவலிங்கமூர்த்திகளையும் திருவாரூர் முதலிய ஏழுதலங்களில் தாபித்து வழிபட்டான். அவற்றுள் தலைமையும் பெருமையும் உடையது திருவாரூர். இவை சப்த விடங்கத் தலங்கள் எனப்படும்.

"சீரார் திருவாரூர், தென்னுகை, நள்ளாறு,
காரார் மறைக்காடு, காருயில் — பேரான
ஒத்த திருவாய்மூர், உவந்ததிருக் கோளிலி
சத்த விடங்கத் தலம்"

என்னும் பாடல் இவற்றைத் தெரிவிக்கும். திருவாரூர் - வீதி விடங்கர், அசபா நடனம்; திருநள்ளாறு – நகவிடங்கர், உன் மத்த நடனம்; நாகை – சுந்தர விடங்கர், பாராவாரதரங்கநடனம், விடங்கர், தேன் நிறமுடைய கோமேதகத்திஞல் இயன்றவர். தியாகேசரின் நடனம் சூக்கும பஞ்சாக்கர நடனம் எனவும், உரவு பொலி நடனம் எனவும் கூறப்படுவதும் உண்டு. திருக் காருயில்–ஆதிவிடங்கர்; குக்குட நடனம், திருக்கோளிலி–அவனி விடங்கர், பிருங்க நடனம்; திருவாய்மூர் – நீலவிடங்கர், கமல நடனம்; திருமறைக்காடு – புவனிவிடங்கர், அம்சபாதநடனம்.

## அதிபத்த நாயனர் :

பெரியபுராணத்தில் சேக்கிழார் இந்நகர்ச்சிறப்பையும் அதி பத்தர் பெருமையையும் கூறியுள்ளார். காவிரிநாடு என்னும்

கற்பகக் கொடியில் மலர்ந்த மலர்போல்வது இந்நகர் என்றும், கருங்கடலில் நீர்முகந்த மேகங்கள் மலை மீது ஏறுவதுபோல இந் நகரின் மாடங்களின்மேல் அடையும் என்றும், திருமகளின் உறைவிடமென்றும், யானைகுதிரை மணிதுகில் ஆகியனவற்றைக் கலங்கள்மூலம் சொரிவது என்றும், பதினெண்நிலங்களில் வாழும்மக்கள் உறையும் பதி என்றும் கூறுகிறார்.

நாகைக் கடற்கரையில் பரதவர் சேரியில் நம்பியாங்குப்பம் என வழங்கும் நுளைப்பாடியில் பரதவர்குலத்தில் அவதரித்தவர் அதிபத்தர். பரதவர் தலைவராய்ச் சிவபத்தியில் சிறந்த இவர் நாள்தோறும் கடலில் மீன்பிடிக்குங்கால் முதல்மீனை 'இது சிவனுக்கு' என்று அன்போடு கடலிலேயே விட்டுவந்தார். இவ்வாறு ஒழுகும்நாளில் மீன்வளம் குறைந்து ஒவ்வொரு மீனே அவர் வலையில் அகப்படத்தொடங்கிற்று. அதனையும் அவ்வந் நாளில் கடலில்விட்டு. வறுமையால் சுற்றம் வாடவும் தாம் வருந்தாது தன்கடமையை வழுவாது செய்துவந்தார்.

ஒருநாள் இவர்தம் ஏவலர்கள் கடலில் வலைவீசியபோது உலகெலாம் விலையெனக் கொள்ளத்தக்க நவமணிகளால் உறுப்பமைந்த பொன்மீன் ஒன்றுஅகப்பட்டது. ஞாயிறு போல ஒளிவீசிய அம்மீனைக்கண்ட அதிபத்தர் இம்மீனும் என்னை ஆட்கொண்டருளிய சிவனுக்கே உரியதாகும் இம்மீன் அவர் திருவடியைச் சேர்க எனக் கடலில் விட்டார். அப்போது சிவபெருமான் விடைமீது விசும்பில் தோன்றி அஞ்சலிகூப்பி நின்ற அதிபத்தரைச் சிவலோகத்திலே, அடியார்களுடன் அமர்ந்திருக்கும் அருளைப்புரிந்து மறைந்தருளினர்.

இறைவன் அதிபத்தர்க்கு அருள்புரிந்தவிழா ஆவணி மாதத்தில் ஆண்டுதோறும் நிகழ்ந்து வருகிறது.

தடிகடற் புகுதல் போலச் சைவமாம் கடலிற் புக்கு
முடிவலை வீசல் போல முதிர்பத்தி வலையை வீசி
நெடியமீன் கவர்தல் போல நிராமய உமையோர் பாகத்(து)
அடிகளாம் மீன்க வர்ந்த அதிபத்தர்க் கன்பு செய்வாம்'

என்பது நாகைப் புராணத்தில் காணப்படும் அதிபத்த நாயனர் தோத்திரப்பாடல்.

**புராண வரலாறுகள் :**

புராணம் என்ற சொல்லுக்கு, பழமை என்பது பொருள். இத்தலத்தைப் பற்றிய பழைய வரலாறுகளைத் தொகுத்துக்கூறு கிறது நாகைக்காரோணப் புராணம். 61 படலங்களையும்,

2506 பாடல்களையும் கொண்ட இந்த நூல் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையால் இயற்றப்பெற்று 1860ல் அரங் கேற்றம் பெற்றது. திருவாவடுதுறை ஆதீன வெளியீடாக வெளியிடப்பெற்று, இத்தலத்தின் அலுவலகத்தில் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளது. இத்தலப்பெருமானை வழிபட்டு அருள் பெற்ற ஆதிசேடன், புண்டரீகமுனிவர், அகத்தியர், சாலிசுகன், ஏழு முனிவர்கள் முதலியோருடைய வரலாறுகள் கூறப்பட் டுள்ளன.

## ஆதிசேடன் வழிபட்டது :

ஆதிசேடன் மகப்பேறில்லாமல் வருந்தி வசிட்ட முனிவர் சொற்படி நிலவுலகம்வந்து காலையில் குடந்தையிலும், உச்சிப் போதில் நாகேச்சரத்திலும், மாலையில் பாம்புரத்திலும் அர்த்த யாமத்தில் நாகையிலும் இறைவனை வழிபட்டு வந்தான். பெருமான் அருளால் பெண்மகவு ஒன்று பிறந்ததும், அதற்கு மூன்று தனச்சுவடுகள் இருப்பதுஅறிந்து வருந்தினன். பெருமான் அசரீரியாக 'இவளுக்குக் கணவனாக வருபவனைக் கண்டால் ஒரு தனம் மறையும்' என்றருளினர். மகளும் வளர்ந்து பருவ மடைந்தாள். சோழர்குலத்தில் தோன்றிய சாலிசுகமன்னன் அவளைக்கண்ணுற்றான். நாககன்னியின் ஒருதனம் மறைந்தது. பெருமான் அருளியபடி நாககன்னிகையைச் சாலிசுகன் மணந்தான். ஆதிசேடனும் இறைவனை நன்றியோடு போற்றி வழிபட்டுத் தன்பெயரால் இவ்வூர் வழங்கவேண்டுமென்ற வரத்தைப்பெற்றான். அதனல் இந்நகரம் நாகை என்று வழங்கலாயிற்று.

## புண்டரீகமுனிவரை ஏற்றுக்கொண்டது :

யமுனைக்கரையில் வேதபுரத்தில் கருத்தமர் என்றமுனிவரின் அருந்தவ மகவாய் அவதரித்தவர் புண்டரீகமுனிவர். வாம தேவர் கண்ணுவர் முதலியோர் சொற்படி நாகைக்காரோணம் வந்து பெருமானையும் அம்பிகையையும் வழிபட்டு இந்த உட லோடு இறைவனை அடைந்து இன்புறவேண்டுமெனத் தவங் கிடந்தார். சிவபெருமான் அவருக்குக் காட்சியளித்து முனிவ ரைத் தன் (காயத்தோடு) திருமேனியோடு ஆரோகணம் செய்து அவரைத் திருக்கயிலைமால்வரைக்கு அழைத்துச்சென்றார்.

## ஆதிபுராணர்:

ஊழிக்காலத்தில் பன்னிரண்டு சூரியர்களும் ஒன்று சேர்ந்து உலகில் வெப்பத்தைச் செய்தனர். உலகம் கலங்கியது. உயிர் கள் வெதும்பின. திருமாலும், பிரமனும், மார்க்கண்டேயர்,

கௌதமர், வசிட்டர், காசிபர், புலத்தியர், அகத்தியர், ஆங்கீரசர் முதலிய ஏழுமுனிவர்களும் இத்தலத்திற்குவந்து பெருமானை வழி பட்டனர். பெருமான் மூலலிங்கத்திலிருந்து தோன்றி, பிரமனை இலிங்கத்தின் அடியிலும் திருமாலை நடுவிலும் முனிவர்களைப் பிலத்திலும் இருக்கச்செய்து காத்தருளினான். பிரளயத்திற்குப் பின்னர் அனைவரும் வெளிவந்து தத்தம் தொழில்களைச் செய்து வாழ்ந்தனர். இவ்வாறு எல்லாக் கடவுளரும் தங்கியிருந்ததால் சிவராசதானி என்றும், மிகப்பழமையாய் விளங்கியதால் ஆதி புராணம் என்றும் இந்நகர் வழங்கப்பெற்றது. பெருமான் ஆதிபுராணர் எனப்பெற்றார்.

## அகத்தியர் வழிபட்டது :

திருக்கயிலையில் சிவபெருமான் பார்வதி தேவியை மணந்த காலத்தில் வடதிசைதாழ்ந்து தென்திசை உயர்ந்தது. பெருமான் அகத்தியரைத் தென்திசைக்கு அனுப்பினார். அகத்தியர் இறைவனது திருமணக் காட்சியைக் காணாது செல்ல நேர்ந்ததே என்ற மனவருத்தத்தோடு பலதலங்களையும் வணங்கிக்கொண்டு நாகைக்காரோணத்தை அடைந்தார். அகத்தியர் சென்று தரிசித்த தலங்களிலெல்லாம் இறைவன் அவருக்குத் திருமணக் கோலம் காட்டியருளினார். அகத்தியர் இத்தலத்தில் தாபித்த அகத்தீச லிங்கமும் அகத்திய தீர்த்தமும் வெளிப்பாளையத்தில் உள்ளன. இத்தலக்கோயிலிலும் தியாகேசர் சந்நிதிக்குப் பக்கத்தில் அகத்தியமுனிவரின் சிலை உள்ளது.

## சுந்தர விடங்கர் :

இந்திரன் சாலிசுகமன்னன் துணையால் நமுசி என்ற அவுணனை வென்றான். அதற்குப்பரிசாக, சாலிசுகமன்னன் இந்திரன் வழிபட்ட சுந்தரவிடங்கரையும் தியாகேசரையும் பரிசாகப் பெற்று இத்தலத்தில் பிரதிட்டைசெய்து பெருவிழா நடத்தினான்.

பதஞ்சலி வியாக்கிரபாதர் இத்தலத்தில் மார்கழித்திருவாதிரை நாளிலும் பங்குனி உத்திரநாளிலும் தியாகேசரின்பஞ்சாக்கரநடனத்தைக் கண்டு தரிசித்தனர்.

## தசரதனின் சனிப்பிரதிட்டை :

அயோத்திமன்னன் தசரதன் ரோகிணி நட்சத்திரத்தில் சனி புகுவதால் உலகம் மழையின்றி வருந்தும் என்பதைச் சோதிட நூலோரிடம் அறிந்தான். சூரியன் சொற்படி இத்தலத்து இறைவனை வழிபட்டுச் சனிப்பிரதிட்டை செய்து உலக உயிர்களைக் காப்பாற்றினான். சனிநாளில் புதுமலர் கொண்டு தன்னை வழிபடுவோர் துன்புறார் என்ற வரத்தையும் பெற்றான்.

**கல்வெட்டுக்கள் :**

இக்கோயில் தொடர்பாக ஏழு கல்வெட்டுக்களுள்ளன. முதல் இராசராசன், குலோத்துங்கன் முதலியோர் காலத்துக் கல்வெட்டுக்கள் அவை.

கைலாசநாதர் கோயில் சுவரில் கி. பி. 1777 ல் டச்சு மொழியில் எழுதப்பெற்ற கல்வெட்டு ஒரு தனவந்தர் இறந்ததைத் தெரிவிக்கிறது. சைனகோபுரத்தில் கிடைத்த வெண்கலச் சிலேயில் 12ஆம் நூற்ருண்டுக்குறிப்பு உள்ளது. ஒரு சிறுகோயிலின்கல்லில் டச்சுமொழியில் கவர்னர் ரெயினியர் வான்விளிசிங்கன் ஆதரவால் 1777 ல் கோயில் கட்டப்பட்டதாகக் கூறப்பட்டுள்ளது. கிராடைன் என்பவரிடமுள்ள முரசு ஒன்றில் தமிழும், கிரந்தமும் கலந்த எழுத்துக்கள் உள்ளன. கண்காட்சியில் உள்ள ஓர்வெள்ளித்தகட்டில் தஞ்சைநாயக்க மன்னன் வீரராகவன் நாகையை டச்சுக்காரருக்குக் கொடுத்த செய்தி குறிக்கப்பட்டுள்ளது. மற்ருெரு தகட்டில் மேற்கண்ட வெள்ளித்தகட்டில் கூறப்பட்ட செய்திகளைத் தஞ்சை மகாராஷ்ட்டிர மன்னன் எக்கோஜி உறுதிப்படுத்திய செய்தி கி. பி. 1676 ல் தமிழில் கூறப்பட்டுள்ளது. பழைய டச்சுக் கிறித்தவக் கோயிலில் 1774 ல் அக்கோயிலுக்கு அடிப்படைக்கல்போடப் பட்டதாகச் சொல்லப்பட்டுள்ளது.

---

## பார்வையாளர் குறிப்பு

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்

**திருக்கருப்பறியலூர் ஸ்ரீகுற்றம்பொறுத்தீசுவரசுவாமி தேவஸ்தானம்**

1—3—81 ஞாயிற்றுக்கிழமை காலேயில் செவ்வாய்பேட்டை "ஸ்ரீ சௌடேசுவரியம்மன் மாதர் சங்கம்" ஆதீனத்துத் திருக்கோயில் திருக்கருப்பறியலூர் ஸ்ரீ குற்றம்பொறுத்தீசுவரசுவாமி திருக்கோயிலுக்கு வழிபடச் சென்ருேம். நிர்வாகி அவர்களும் அர்ச்சகர்களும் மற்றவர்களும் இன்முகத்தோடு வரவேற்றுச் சிறப்பாக வழிபாடு செய்துவைத்தார்கள். திருக்கோயில் தூய்மையாக வைக்கப்பட்டுள்ளது. வழிபாடு சிறப்பாக அமைந்தது.

( ஒ—ம் ) T. **கண்ணம்மாள்**

செயலாளர்.

கட்டுரை எண். 15.

# அபிராமி அந்தாதி

புலவர். திரு. K. சந்தானராமன், M A, B. Lit'
D. P. P. A,. D. U. N. I. U.

**பூத்தவளே! புவனம் பதினான்கையும்; பூத்தவண்ணம்**
**காத்தவளே! பின்கரந்தவளே! கறைக்கண்டனுக்கு**
**மூத்தவளே! என்றும் மூவாமுகுந்தற்கு இளையவளே!**
**மாத்தவளே! உன்னையன்றி மற்றுஓர் தெய்வம் வந்திப்பதே? 13**

### அ. புவனம் பதினான்கையும் பூத்தவளே!

(1) பதினான்கு உலகங்களையும் தோற்றுவித்தவள் என்பது பொதுவான பொருள்.

(2) பூலோகம், புவர்லோகம், சுவர்லோகம், ஜனலோகம், தபோலோகம், மஹாலோகம், சத்யலோகம் ஆகிய ஏழும் மேல் உலகங்கள். அதலம், விதலம், சுதலம், தராதலம், மஹாதலம், ரஸாதலம், பாதாளம் ஆகிய ஏழும் கீழுலகங்கள்.

(3) முன் பாடல் விளக்கத்தில் கண்டபடி தானன்றி வேறு அல்லாத புவனங்களை மலரச்செய்தாள். அரும்பு மலராகவிரிவது போன்று, சிறிதும் சிரமமின்றி அது நிகழ்ந்துவிட்டது. எனவே பூத்தவளே என்றார்.

(4) உந்மேஷ நிமிஷோத்பந்ந விபந்ந புவனாவளி – கண்களைத் திறந்து மூடுவதற்குள் உண்டாகி மறையும் உலக வரிசையினையுடையவள் எனச் சகஸ்ரநாமம் கூறுகிறது. நமது இச்சையும், முயற்சியும் சிறிதும் இன்றி இமைகள் மூடித் திறப்பது போல் அவள் புவனங்கள் பதினான்கையும் படைத்துவிட்டாள்.

(5) "தானே தலைவி என நின்ற தற்பரை தானே உயிர்த்துத் தந்த பதினாலும்" என்கிறது திருமந்திரம்.

(6) "தில்லைச் சிவகாமவல்லி பூத்தலின் அன்றே இப்பூமியைப் 'பூ' என்பதே" என்றார் குமரகுருபரரும். உரையாசிரியர் திரு. முருகவேள் இங்ஙனம் அழகுபட எடுத்துக்காட்டுகிறார்.

### ஆ பூத்தவண்ணம் காத்தவளே!

(1) அவ்வாறே அப்பதினுன்கு புவனங்களையும் காத்து ரக்ஷிப்பவள்.

(2) உலகியலில் குழந்தைகளைப் பெறுவது எளிது. அவர்களைச் சிறந்த முறையில் காத்து வளர்த்தல் மிகவும் கடின மானது – ஆனல் அன்னைக்குக் காத்து வளர்த்தலிலும் சிறிதும் சிரமமில்லை என்பதனல் பூத்தவண்ணம் காத்தவளே என்ருர்.

(3) 'ரக்ஷாகரி' — 'காத்தல் புரிபவள்' என்று சகஸ்ர நாமம் புகழும்.

(4) நமக்கு மேலும், கீழும், முன்னும், பின்னும் பத்துத் திக்குகளிலும், தலைமுடிமுதல் கால்நகம் ஈருகவுள்ள நமது உடல் உறுப்புக்களிலும், வழியிலும், வம்சத்திலும், நாம் வேண் டினும் வேண்டாதொழியினும் அம்பிகை பல்வேறு நாமங்கள் தாங்கி ஆங்காங்கு முன்னின்று காக்கிருள் என்பதனைத் தேவி மகாத்மியம் பூர்வபாகம் விளக்குகிறது.

(5) இடர் தரும் வழியில் வழித்துணையாகியும், மன்னர் சபைதனில் மதி நுட்பமாகியும், போரில் ஆற்றலாகியும், சாலை சந்திப்புக்களில் விபத்துக்களை நீக்குபவளாகியும் ஆங்காங்கே வந்து அம்பிகை காப்பதனை, தேவி பாகவதம் எடுத்துக் காட்டு கிறது.

(6) ஐயன் அளந்தபடி இருநாழிகொண்டு அண்டமெல்லாம் காக்கும் அபிராமி கல்லிடைப்பட்ட தேரையினையும் கருப்பை யுறு சீவனையும் காக்கும் தொழிற்பெருமையுடையவள் எனப் பதிகத்தில் பட்டரே பாடுவார்.

(7) அண்டங்கள் அனைத்தும் ஒன்றையொன்று விலகி யிருக்கும் படிக்கும், சுழலும் படிக்கும், சுடரும்படிக்கும் செய்து படைத்தவள் அவ்வாறே அவை ஒன்றையொன்று மோதிக் கொண்டுவிடாமலும் தத்தமக்குரிய பாதையில் இயங்கும்படியும் செய்கிருள். உயிர்கள் வாழும் உலகங்களில் தேவையான தட்ப வெப்பம், காற்று, நீர், நெருப்பு முதலிய இன்றியமையா தனவற்றை நல்கிக் காக்கிருள்.

ஏன்? நமது பூமியே சூரியனைவிட்டு சில ஆயிரம் மைல்கள் விலகிச் சென்ருல் அனைத்தும் பனிக்கட்டியாய் உறைந்துவிடும். அவ்வாறே சூரியனை நெருங்கிச்சென்ருல் அனைத்தும் அனலில்

பொசுங்கிவிடும். அவ்வாறு நிகழாமல் பூத்தவண்ணம் காப்பவள் யார்?

நம் வீட்டு மின்விசிறியினைச் சிலநாட்கள் துடைக்காமல் விட்டுவிட்டால் அதன்மீது எவ்வளவு தூசு படிந்து அதன் வண்ணமே மாறிவிடுகிறது? காற்றிலுள்ள அத்தனை தூசும் நமது நுரையீரலுக்குச்சென்று படிந்தால் என்னாகும்? நாம் உள்ளிழுக்கும் காற்றினை வடிக்கட்டி, தூய்மையாக்கி, உட் செலுத்தி நம் நுரையீரலினைப் பழுதுபடாமல் காப்பது யார்?

பூத்தவண்ணம் அவள் காக்கிறாள் என்பதற்கு இவை நாம் அன்றாடம் காணும் சான்றுகளாகும்.

(8) 'துர்க்கம்' என்னும் அகழிபோல் இருந்து - அரண் போல் இருந்து நம்மைக் காப்பதாலேயே அவள் 'துர்க்கை' எனப்பட்டாள் என்பதனை முன்னரே கண்டோம். கருவினைக் காக்கும் கர்ப்பரக்ஷகியும் அவளே! எல்லைக்காவல் தெய்வமாய் எங்கும் திகழ்பவள் அவளே!

(9) அவரவர் வினைகளுக்கேற்ப உலகில் படைத்தது போலவே அவர்களைக் கடைத்தேற்றி பிறவிப்பிணியினின்றும் காப்பவள் அவளே.

(10) அண்டமெல்லாம் பூத்தவளே அபிராமி பட்டரின் வாயினின்று "இன்று பௌர்ணமி" என்னும் சொல்லாகவும் மலர்ந்தாள். மலர்ந்த வண்ணமே மெய்ப்பித்துக் காட்டி, அவரையும் காத்துவிட்டாள் அன்றோ?

### இ. பின் கரந்தவளே!

(1) பிறகு அவற்றினை மறைத்தவள்.

(2) கரந்தவள் என்ற சொல் இங்கு சம்ஹாரத்தைக்குறிக்க வில்லை. திரோதானம் என்னும் மறைத்தலையே குறிக்கிறது. சம்ஹாரத்துக்குப் பிறகு மறைக்கிறாள் என்பதனையே, பின் கரந்தவள் என்ற இரு சொல்லால் குறிக்கிறார். 'பின்' என்பதனை சம்ஹாரத்துக்குப்பின் என்று பொருள்கொள்ளுதல் பொருந்தும்.

(3) மாயாஸ்வரூபிணியான அம்பிகை தனது மாயையினால் அனைத்தையும் மறைக்கிறாள். தன்னிடம் தோன்றித் தன்னால் வளர்ந்தவற்றைத் தன்னிடமே மறைத்துக்கொள்ளுகிறாள்.

### ஈ. கறைக்கண்டனுக்கு மூத்தவளே !

(1) நச்சுக் கறை பொருந்திய கழுத்தினையுடைய இறைவனுக்கு முன் தோன்றி மூத்தவள்.

(2) பூர்வஜா – முன்னால் உண்டானவள் என சகஸ்ரநாமம் கூறுகிறது. "மும் முதற்கும் வித்தே வருகவே" என மீனாட்சியம்மைப் பிள்ளைத்தமிழில் குமரகுருபரர் அழைக்கிறார். இவை நஹிநிந்தா நியாயத்தின் பாற்படும். அதாவது வேறு தெய்வத்தைக் குறைவுபடுத்தும்நோக்கம் இன்றி இஷ்டதெய்வத்தை உயர்த்திக் கூறும் முறையாகும்.

[3] "அவளே எங்கள் சங்கரனார் மனைமங்கலமாம்" என்ற பாடலும் கறைக்கண்டனுக்கு மூத்தவளே என்ற இப்பாடலும் மிகவும் சர்ச்சைக்குரியபாடல்களாகும். முன்னரே உரைகண்ட திருவாளர்கள் இராமானந்தயோகி, ம. க. வேற்பிள்ளை, கி.வா.ஜ, சண்முகநாதன், முருகவேள் ஆகியோரின் விளக்கங்களின் தொகுப்பு வருமாறு:– சக்திதத்துவத்தினின்றும் சதாசிவதத்துவம் தோன்றுதலின் கறைக்கண்டனுக்கு மூத்தவளே என்றார். "சக்தி தான் சிவத்தை ஈன்றும்" என்று சித்தியாரில் வருகிறது. திருமந்திரம் அன்னையே இறைவனுக்குத் "தாயும், மகளும், தாரமுமாமே" என்கிறது. இமவான் மகட்குத் தன்னுடைக் கேள்வன் மகன், தகப்பன், தமயன் எனத் திருவாசகம் கூறுகிறது.

[4] பிறவா இறவாப் பெருமாட்டிக்கும் இறைவனுக்கும் மூத்தவள் இளையவர் என்னும் வேறுபாடு ஏது? பின்னர் ஏன் அபிராமிபட்டர் மூத்தவள் என்கிறார்?

இங்கு மூத்தமை என்பது வயதினைப் பற்றியது அல்ல. நாமரூபங்களைக் கடந்து எந்நாட்டவர்க்கும் எச்சமயத்துக்கும் பொதுமையுடன் விளங்கும் இறைவனை 'நிர்க்குணப் பிரம்மம்' என்பர். அந்த நிர்க்குணப்பிரம்மம் ஜீவகோடிகளாகிய பசுக்களின் பக்குவத்துக்கு ஏற்ப "அவரவர் அறிவறி வகை வகை அவர் அவர் இறைவனாய்" வரும்பொழுது 'சகுணப் பிரம்மம்' என அழைக்கப்படுகிறான். அவ்வாறு சகுணமாய் வரும் பொழுது சக்தி முந்திக்கொண்டு வந்து அருள்பாலிக்கிறாள் என்பதே இதன் தத்துவக்கருத்து.

5] ஒருபகுதியில் 5 ஆண்டுகள் ஒரு அதிகாரி பணியாற்றி வருகிறார். பின்னர் இன்னொரு அதிகாரி அப்பகுதிக்குப் புதிதாக வருகிறார். அவர் முன்னரே இருப்பவரைவிட முதிர்ந்தவராகவும்

அல்லது சமவயதுடையவராகவும் இருக்கலாம். ஆனல் அங்கு ஐந்து ஆண்டுகள் பணியாற்றியவரை அப்பகுதியின் "மூத்த அதிகாரி' எனக்குறிப்பிடுகிறேம். இங்குவயதுஒருபொருட்டல்ல. அப்பகுதியில் அவர் பெற்ற அநுபவமும், அறிமுகமுமே அவ் வாறு எண்ணப்படுவதன் காரணங்களாகும். தாய் காட்டவே தந்தையினை அறியுமாப்போலே இறைவியின் மூலமாகவே இறைவனையும் அறிகிறேம். "உம்மாச்சி" (உமாமகேஸ்வரி யினையே) குழந்தைக்கு முதலில் அறிமுகம் செய்கிறேம். கறைக்கண்டனுக்குமுன் அறிமுகமாவதால் மூத்தவள் ஆகிருள்.

(6) சித்தாந்த வேதாந்தங்களை அறியாப் பாமரரும் முதலில் காத்தாயி, பேச்சாயி, மகமாயி, காளியம்மா, பிடாரி யம்மா என்றெல்லாம் அவளை அறிகின்றனர். பின்னரே, அறிவு வளர்ச்சியும்,தெளிவும்பெற்றபின்சோமாஸ்கந்தர், கஜசம்ஹாரர், தக்ஷிணமூர்த்தி, வீரட்டானர் என்று அறியத்தலைப்படுகின்றனர். அவற்றின் தத்துவ விளக்கங்களையும் அறிய முயல்கின்றனர். "ஆபால கோப விதிதா" – சிறுவர்களாலும், இடையர் களாலும் அறியப்பட்டவர் என்று சகஸ்ரநாமம் போற்றுகிறது. இவ்வாறு தொடக்கநிலையிலேயே – பாமரநிலையிலேயே அவள் இறைவனுக்குமுன் அறிமுகம் ஆவதால் மூத்தவள் என்கிருர்.

(7) உலகங்கள் நிலைபெற்று, இந்திரனின் அரசாட்சி ஏற் பட்டு, துருவாசர் போன்ற முனிவர்கள் தோன்றி, தேவ அசுரர் களும் தோன்றிய நிலையில் அமுதம் கடைந்தபொழுது வெளிப் பட்ட நஞ்சினையுண்டு இறைவன் கறைக்கண்டன் ஆனன்.

அவ்வுலகங்கள் எதுவும் தோன்றுவதற்கு முன்னரே பிரளய வெள்ளத்தில் கட்டை விரலைச் சுவைத்துப் படுத்திருந்த திரு மாலினை அம்பிகைதாலாட்டி வளர்த்தாள் எனத்திருமாலின்வாய் மொழியாகவே தேவிபாகவதம் விளக்குகிறது. சம்ஹாரத்துக்குப் பின் கரந்தவள் பிரளயகாலம்தொட்டே அனுக்ரஹம் என்னும் அருள் செய்யத்துவங்கி – அவ்வருள் பாலிப்பில் கறைக் கண் டனையும் முந்திக்கொண்டு வருவதாலும் மூத்தவள் என்ருர்.

(8) உலகெலாம் உணர்ந்து ஓதற்கரியவனுகிய இறை வனின் புகழ்பாடும் சைவத்திருமுறைகளும் முந்திவந்து முலைப் பாலளித்த அன்னைக்குரிய "தோடுடைய செவி" யுடன்தானே துவங்குகிறது?

(9) Genetics என்னும் உயிர்களின் தோற்றம் பற்றிய விஞ்ஞான ஆராய்ச்சியாளர்களில் பெரும்பாலோர் உலகில்

முதலில் பெண் உயிரே தோன்றியிருக்கவேண்டுமென்று கருது கின்றனர். சக்தி அம்ச உயிரே மூத்தது என அவர்கள் கருது வதும் ஈண்டுச் சிந்தித்தற்குரியது.

### உ. முகுந்தற்கு என்றும் மூவா இளையவளே!

(1) திருமாலினுக்கு எப்போதும் முதுமை எய்தாத இளைய சகோதரி.

(2) நித்ய யவ்வனு – என்றும் இளையவள் என்றும், த்ருத சேச்வரி – மூன்ரும் தசையில் இருக்கும் தலைவி என்றும் சகஸ்ர நாமம் போற்றுகிறது. பால்யம், கௌமாரம், யௌவனம், விருத்தம்என நான்குதசைகளைக் குறிப்பிடுவர். இவற்றுள் மூன்ரு வதாகிய யௌவனத்திலேயே எப்போதும் அவள் இருப்பாள். முதுமை என்பதனை எப்போதும் எய்தாள். ஆகவே என்றும் மூவா இளையவள் ஆனுள்.

(3) பிரளய காலத்தில் தாலாட்டி வளர்த்த மூத்தவளான அதேபெருமாட்டி அருட்கனிவால் முகுந்தனுக்குத் தங்கையாக வும் தோன்றினுள். காஞ்சிவரதருக்குக் காமாட்சி தங்கையாகத் தோன்றினுள் என்பனபோன்ற வரலாறுகளைப் புராணங்களில் பரக்கக்காணலாம்.

(4) ஒன்ருய் அரும்பிப் பலவாய் விரிந்தபொழுது திருமா லுக்கு அம்பிகை தங்கையாகவும் பிரமனுக்கு இலக்குமி தங்கை யாகவும் உருத்திரனுக்கு சரஸ்வதி தங்கையாகவும் தோன்றினர் என்றும் கூறுவர்.

(5) "பத்மநாப சகோதரி" என்று சகஸ்ரநாமம் போற்று கிறது. 'செங்கண்மால் திருத்தங்கச்சி' என அபிராமி அந்தாதி யும் பின்னுல் புகழும்.

### ஊ. மாத்தவளே!

(1) பெருந்தவ வடிவானவள் என்றும், பெருந்தவத்தை யுடையவள் என்றும் பொருள்படும்.

(2) 'மாத்து' என்ருல் பெருமையெனவும், பொருள் உண் டானதால் பெருமைமிக்கவள் எனவும் கொள்ளலாம்.

(3) தக்கன் மகளாகி இறைவனை அடையும்வரை பெருந் தவம் இயற்றினுள். பின் இமவான்மகளாகிப் பெருந்தவம் இயற் றினுள். முதலில் தினசரி ஒருவேளை உணவு, பின் வாரத்திற்கு

ஒருவேளை உணவு என்ற முறையில் குறைத்துக்கொண்டே வந்து கடைசியில் உலர்ந்து விழும் இலைகளைமட்டுமே புசித்துக் கடுந்தவம் இயற்றுவர். அன்னை இமவான் மகளாகித் தவமியற்றுகையில் அவ்விலையும் உண்ணுது நீக்கினள். எனவே "அபர்ணு –இலையும் புசியாதவள்" என்றபெயர் அவளுக்கு உண்டாயிற்று. ஆகவே அவள் மாத்தவள்.

(4) இறைவனின் திருமேனியில் பாகம் பெறவேண்டி அன்னை திருக்கேதாரத்தில் கடுந்தவம் இயற்றினள்.

(5) கம்பை நதிக்கரையில் காமாட்சியாகியும், மயிலாப்பூரில் மயில்வடிவாகியும், திருவாவடுதுறையில் பசுவடிவாகியும் பெருந்தவமியற்றிய பெருமாட்டி மாத்தவள்தானே ?

(6) நீலத்திரைக் கடலோரத்தில் நீங்காத்தவம் இயற்றும் குமரியன்னையும் மாத்தவள் அல்லவா ?

(7) தவம் என்பது உடலினை ஒறுத்து நோற்பது மட்டு மன்று. ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருத்துறையூரில் இறைவனிடம் தவ நெறியினை வேண்டிப் பெற்ருர் என்பது வரலாறு. அவர் பெற்ற தவநெறி சிவச்சிந்தனை – சிவத் தொண்டு – சிவனைப் பாடுதல் ஆகியவைதாமே ?

எப்போதும் இறைவனைச் சிந்தையில் கொண்டு அவன் அருகில் இருந்து மனமங்கலமாய்த் தொண்டாற்றும் அன்னையின் தவம் மாத்தவம் ஆதலால் மாத்தவளே என்ருர்.

(8) எனவே திருமூலரும் "தவத்தின் தலைவி" எனவும் "அருந்தவப் பெண்பிள்ளை" எனவும் திருமந்திரத்தில் புகழ்கின்ருர்.

**எ. உன்னையன்றி மற்ருேர் தெய்வம் வந்திப்பதே ?**

(1) மேற்கூறிய சிறப்புக்கள் பெற்ற உன்னைத்தவிர வேறு தெய்வத்தினையும் வழிபடலும் உண்டோ ? (இல்லை என்றவாறு).

(2) திருக்கடவூர் மக்கள் எண்ணியபடி வேறு துர்த்தேவதைகளை வழிபடவில்லை என்பதனை மீண்டும் தெளிவாக்குகிருர்.

**ஏ. ஐந்தொழில் புரியும் அம்பிகை**

இப்பாடலில் அம்பிகையின் ஐந்தொழில் புரியும் ஆற்றலினையும் கூறுகிருர். 'பூத்தவளே' என்றதால் சிருஷ்டியும்,

'காத்தவளே' என்றதால் ஸ்திதியும், 'பின்கரந்தவளே' என்றதால் சம்ஹாரமும் திரோதானமும், 'கறைக்கண்டனுக்கு முத்தவள்' 'மற்றும் முகுந்தற்கு இளையவள்' என்றதால் அனுக்ரஹமும் குறிப்பிடப்படுகின்றன.

சகஸ்ரநாமம் கீழ்க்கண்ட நாமங்களில் ஐந்தொழிலை விளக்குகின்றது.

(1) சிருஷ்டி கர்த்தி — படைப்பவள்
(2) ப்ரம்மருபா — பிரமன் வடிவினள்
(3) கோப்த்ரி — காத்தல் புரிபவள்
(4) கோவிந்த ருபிணி — திருமால் வடிவினள்
(5) சம்ஹாரிணி — அழிப்பவள்
(6) ருத்ரருபா — உருத்திரன் வடிவினள்
(7) திரோதானகரி — மறைத்தல் புரிபவள்
(8) ஈச்வரி — ஈச்வரன் வடிவினள்
(9) சதாசிவா — சதாசிவன் வடிவினள்
(10) அனுக்கிரஹதா — அருள் புரிபவள்
(11) பஞ்சக்ருத்ய பாராயணு — ஐந்தொழிலில் ஈடுபாடுள்ளவள்

இப்பாடலின் பாராயண பலன் குன்ருத இளமை எய்துதல் ஆகும்.

---

## பார்வையாளர் குறிப்பு

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்

### குத்தாலம் ஸ்ரீ உக்தவேதீசுவரசுவாமி தேவஸ்தானம்

தருமையாதீனத்திற்குச் சொந்தமான குத்தாலம் ஸ்ரீ உக்த வேதீசுவரசுவாமி கோயிலுக்கு 1981 ஆண்டு ஜனவரி 26-ந்தேதி காஞ்சிபுரத்திலிருந்து நாங்கள் சிவனடியார் திருக்கூட்டத் தல யாத்திரையாக வந்த எங்களுக்கு சிவாசாரியாரவர்கள் ஸ்தல வரலாறு முதலானவைகளை நன்கு விளக்கிச்சொல்லி, செம்மை யாகத் தரிசனம் செய்துவைத்தார். திருக்கோயில் சுத்தமாக வைக்கப்பட்டிருக்கிறது. தரிசனம்எங்கள்உள்ளங்களை ஈர்த்தது.

(ஒ-ம்) C. S. ஞானப்பிரகாசவேல் பிள்ளை.

காஞ்சி சிவனடியார் திருத்தல வழிபாட்டு யாத்திரைக்குழு.

# செய்திகள்

## ஆயில்யத்திருநாள் ஆலய வழிபாடு

தருமையாதீனம் இருபத்தாருவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்களின் ஜன்மநட்சத்திரமாகிய ஆயில்யத்திருநாள் ஆலய வழிபாடு 17—3—1981 செவ்வாய்க்கிழமையன்று: திருமருகல் ஸ்ரீ வண்டுவார்குழலி உடனுகிய ஸ்ரீ மாணிக்கவண்ணர் ஆலயத்திலும், திருச்சாத்தமங்கை ஸ்ரீ மலர்க்கண்ணம்மை உடனுகிய ஸ்ரீ அயவந்தீசுவரர் ஆலயத்திலும் மிகச் சிறப்பாக நடைபெற்றது. அவ்வத் திருக்கோயில்களில் விசேஷ அபிஷேக ஆராதனைகள் நிகழ்த்தப்பெற்றன. தலத்திருப்பதிகங்கள் பாராயணம் செய்யப்பெற்றன. திருமருகல் திருக்கோயிலிலும் திருச்சாத்தமங்கை கோயிலிலும் ஆதீன அடியவர் ஸ்ரீ நெல்லையப்ப சுவாமிகள், வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர், எம். ஏ., வித்துவான் திரு. சொ. முத்தையன் எம். ஏ. ஆகியோர் சமயச் சொற்பொழிவாற்றினர். அன்பர் பலர் வந்திருந்து சுவாமி தரிசனம் செய்தும் சொற்பொழிவுகளைக் கேட்டும் பயன் பெற்றனர்.

## வசந்தநவராத்திரி விழா

தருமையாதீனம் ஸ்ரீ ஆனந்தபரவசர் பூங்காவில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி இருக்கும் ஸ்ரீ வனதுர்க்கா தேவிக்கு வசந்த நவராத்திரி விழா 5—4—81 ஞாயிற்றுக்கிழமை தொடங்கிச் சிறப்பாக நடைபெறுகிறது. நாடோறும் ஸ்ரீ வனதுர்க்கா தேவிக்கு உலகநலன் கருதி விசேஷ அபிஷேக ஆராதனைகளும், நவசக்தி அர்ச்சனைமூலம் லட்சார்ச்சனையும், சப்தசதி மகாமந்திர அர்ச்சனையும் நிகழ்த்தப்பெறுகின்றன.

## பங்குனித்திங்கள் பெருவிழா

**வேளூரில் :**

தருமையாதீனத்திற்குச் சொந்தமான வைத்தீசுவரன் கோயில் ஸ்ரீ வைத்தியநாத சுவாமி தேவஸ்தானத்தில் 11—3—81

புதன்கிழமையன்று தொடங்கிப் பத்துநாட்கள் பங்குனி உத்திரப் பெருவிழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. கொடியேற்றம், சகோபுரக்காட்சி, திருத்தேர்விழா, தீர்த்தவிழா ஆகியவை சிறப்புத் திருநாட்களாகக் கொண்டாடப்பெற்றன. 12, 13, 14, 15—3—81 ஆகிய நான்கு நாட்களிலும் தருமையாதீனப் பல்கலைக்கல்லூரிப் பேராசிரியர் திரு. மு. சிவச்சந்திரன் எம். ஏ. பெரியபுராணத் தொடர் விரிவுரையாற்றினர். 16—3—81 திங்கட்கிழமையன்று நிகழ்வுற்ற திருமுறைவிழா - தேவார வகுப்பு ஆண்டுவிழாவில் தருமையாதீனப் பல்கலைக்கல்லூரிப் பேராசிரியர் புலவர் திரு. இரா. செல்வக்கணபதி எம். ஏ. 'மூவர் தமிழ்' என்னும் பொருளில் விரிவுரையாற்றித் தேவார வகுப்பு மாணவர்களுக்குப் புரிசு வழங்கினர். பண்ணிசைவாணர்களின் திருமுறைப் பாராயணத்துடன் திருமுறைகள் யானைமேல் திருவீதியுலா நடைபெற்றது. அன்பர் பலர் வந்து சுவாமிதரிசனம் செய்தும் விரிவுரைகளைக் கேட்டும் பயன் பெற்றனர்.

## திருபுவனத்தில் :

தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருபுவனம் ஸ்ரீ கம்பகரேசுவர சுவாமி தேவஸ்தானத்தில் 11—3—81 புதன்கிழமையன்று தொடங்கிப் பத்துநாட்கள் பங்குனிஉத்திரப் பெருவிழா சிறப்பாக நடைபெற்றது. கொடியேற்றம், தன்னைத்தான் அருச்சித்தல், சகோபுரக்காட்சி, திருக்கல்யாணவிழா, திருத்தேர்விழா ஆகிய சிறப்புவிழாநாட்களில் பெருந்திரளானமக்கள் சுவாமிதரிசனம் செய்து பயன்பெற்றனர். திருவிழா நாட்களில் மாலையில் சமயச் சொற்பொழிவு நிகழ்வுற்றது. 13—3—81 முதல் 15—3—81 வரை மூன்று நாட்கள் மாயூரம் தேசியமேல்நிலைப் பள்ளித் தமிழாசிரியர் புலவர் திரு. ஆ. இராமபத்திரன் எம். ஏ. பெரியபுராணத் தொடர்விரிவுரையாற்றினர். 16—3—81 திங்களன்று திருமுறைவிழாவும், தேவாரவகுப்பு ஆண்டுவிழாவும் நிகழ்வுற்றபோது தருமையாதீனப் பல்கலைக்கல்லூரி முதல்வர் வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர் எம். ஏ. 'திருமுறைச் சிறப்பு'ப்பற்றி விரிவுரையாற்றித் தேவார வகுப்பு மாணவர்கட்குப் பரிசுகள் வழங்கினர். திருமுறைகள் அலங்கரிக்கப்பட்டு யானைமேல் வைக்கப்பெற்றுத் திருவீதியுலா நடைபெற்றது. 22—3—81 ஸ்ரீ சரபர் உற்சவத்தன்று ஸ்ரீ சரபமூர்த்திக்கு ஏகதின லட்சார்ச்சனையும் இரவு வெள்ளிரதக் காட்சியும் நிகழ்வுற்றன. அன்று ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள்

எழுந்தருளி, வழிபாடாற்றி, அன்பர்கட்கு அருட்பிரசாதம் வழங்கினார்கள்.

**பேரளத்தில் :**

தருமையாதீனத்திற்குச் சொந்தமான பேரளம் ஸ்ரீ பவானியம்பாள் உடனுகிய ஸ்ரீ சுயம்புநாதசுவாமி தேவஸ்தானத்தில் உத்திரபாதத் தீர்த்தத்திருநாள் 20—3—81 வெள்ளிக்கிழமையன்று ஏகதின உற்சவமாக மிகச்சிறப்பாக நடைபெற்றது. அன்று காலை பஞ்சமூர்த்திகளுக்கும் விசேஷ அபிஷேக ஆராதனைகளும், அக்னிபுஷ்கரணிதீர்த்தத்தில் தீர்த்தம் கொடுத்தருளலும், இரவு திருவீதியுலாவும் நிகழ்வுற்றன. மாலை மாயூரம் தேசிய மேல்நிலைப்பள்ளித் தமிழாசிரியர் புலவர் திரு. ஆ. இராமபத்திரன் எம். ஏ. 'பார்வதி திருமணம்' என்பதுபற்றி விரிவுரை ஆற்றினர். அன்பர்கள் சுவாமிதரிசனம் செய்தும் சொற்பொழிவினைக் கேட்டும் பயனுற்றனர்.

## ஸ்ரீ குருஞானசம்பந்தர் பணிமன்றச் செய்திகள்

**மதுரை (கிளை) :**

மதுரை ஸ்ரீ குருஞானசம்பந்தர் பணிமன்றக் கிளையின் சார்பில் நான்காவது திருமுறைப்பாராயணக் கூட்டுவழிபாட்டுக் கூட்டம் 15—3—81 அன்று தென்திரு ஆலவாய்சுவாமி கோயிலில் நடைபெற்றது. மதுரைப் பல்கலைக் கழகச் சைவத்துறைத் தனி அலுவலர் திரு. க. வச்சிரவேல் முதலியார் தலைமையில் அகத்தியர் தேவாரத்திரட்டில் அடங்கிய கோயில்திறம் பதிகங்கள் முற்றோதல் பாராயணம் செய்யப்பெற்றது. கூட்டத்தின் போது தலைவர் 'ஆரூர் தில்லை' க்கு விளக்கவுரை நல்கினர். திரு. க. வெள்ளைவாரணனர் 'தில்லைச்சிற்றம்பலமும்' என்ற பதிகத்திற்கு விளக்கமளித்தார். திரு. மு. சண்முகம் பிள்ளை 'காட்டூர்க் கடலே', என்ற பதிகத்திற்கு விளக்கம் அளித்தார். திருமுறைப்புரவலர் திரு. இராம. முத்து பழநியப்பச் செட்டியார் சார்பில் அவர்கள் திருமகனர் மு. பழ. கண்ணப்பச் செட்டியார் நண்பகல் மாகேசுவரபூசை நிகழ்த்தினர்.

ஐந்தாவது திருமுறைப் பாராயணக் கூட்டுவழிபாட்டுக் கூட்டம் 29—3—81 அன்று ஸ்ரீ மாணிக்கவாசகர் அவதாரத் தலமாகிய திருவாதவூர் ஸ்ரீ திருமுறைநாதசுவாமி கோயிலில் நிகழ்ந்தது. அகத்தியர்தேவாரத்தில் விதிக்கப்பட்ட 'சிவன் உருவங்கள்' பதிகங்கள் ஐந்தும் பாராயணம் செய்யப்பட்டன.

இப்பதிகங்கள் ஐந்தனையும்பற்றி முறையே திருவாளர்கள் க. வச்சிரவேல் முதலியார், க. வெள்ளைவாரணனார், மு. சண்முகம் பிள்ளை ஆகியோர் விளக்கம் அளித்தனர். மகாவித்துவான் திரு. ச. தண்டபாணி தேசிகர் வாதவூரர் பெருமைபற்றி உரை நிகழ்த்தினார். திருவாதவூர்க் கோயில் ஓதுவார் திரு. யாழ்கீத சுந்தரம் பிள்ளை மாகேசுவரபூசை நிகழ்த்தினார்.

ஆறாவது திருமுறைப் பாராயணக்கூட்டுவழிபாடு 5—4—81 மதுரை பழையசொக்கநாதர் கோயிலில் நிகழ்ந்தது. கூட்டம் லாலா ஸ்ரீரங்க சத்திரத்தில் நிகழ்வுற்றது. திருமுறைவள்ளல் திரு. இராம. முத்து பழனியப்பச் செட்டியார் தலைமைதாங்கினார். அகத்தியர் தேவாரத்திரட்டில் விதிக்கப்பெற்ற, திருவடிச் சிறப்புப் பதிகங்கள் பாராயணம் செய்யப்பட்டன. திருவாளர்கள் க. வச்சிரவேல் முதலியார், க. வெள்ளைவாரணனார், மு. சண்முகம் பிள்ளை ஆகியோர் பதிகவிளக்கவுரை நிகழ்த்தினர். சத்திர நிர்வாகத்தினரால் மாகேசுவரபூசை நிகழ்த்தப் பெற்றது. மன்ற அமைப்பாளர் திரு. தா. குருசாமி ஓதுவார், பணிமன்ற உறுப்பினர்கள் திருமுறைக் கூட்டங்களில் கலந்துகொண்டு இறைவழிபாடு ஆற்றியும் திருமுறைவிளக்கம் கேட்டும் பயன்பெற்றனர்.

## மேலையூர் (கிளை):

ஸ்ரீ குருஞானசம்பந்தர் பணிமன்றத்தின் மேலையூர்க் கிளையின் சார்பில் 29—3—81 அன்று பூம்புகாரில் உள்ள சம்பாபதிஅம்மன் கோயிலில் வழிபாடு நிகழ்வுற்றது. பணிமன்ற அமைப்பாளர் திரு. இரா. இராஜசேகரன், பி. எஸ்ஸி., பி. எல். அனைவரையும் வரவேற்றார். பணிமன்ற உறுப்பினர்களும் சீனிவாசா உயர்பள்ளி மாணவர்களும் உழவாரப்பணி செய்தனர். களைநீக்கத்தின்பொருட்டு அமிலம் ஊற்றினர். கல்லூரி மாணவர் திரு. திருஞானசம்பந்தம் பலகுரல் ஒலி எழுப்பி மகிழ்வித்தார். செயலர் திரு. வேலுச்சாமி சுதந்திரன், திருக்கோயில்பற்றி உரையாற்றினார். அன்பர்கள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

உ

# எதிர்காலம்

★

**ஜோதிஷம் திரு. A. இராசமாணிக்கம்**
ஸ்ரீ குமரகுருபரசுவாமிகள் நடுநிலைப்பள்ளி, திருப்பனந்தாள்.

( துன்மதிஞு சித்திரைமீ 1உ முதல் 31உ முடிய

(13—4—81 முதல் 13—5—81 முடிய)

| | | | |
|---|---|---|---|
| பு செ | சூ சு | | |
| | இராசி | | ரா சந் |
| கே | | | |
| | | | ல/ கு சனி |

| | | | |
|---|---|---|---|
| சனி பு செ | கு. கே சூ. சு | ல/ | |
| | அம்ஸம் | | |
| சந் | | | |
| | | ரா | |

கத கலியுகாப்தம் 5082 துன்மதிஞுத்தின் கலி சுத்ததினம் 1856242 நாள் 28 நாழிகை 1 விஞடி 15 தற்பரை. இதை 7 ஆல் வகுத்துவந்த மீதி சுக்கிராதியாக எண்ண நாலாவது தினம் சோமவாரம் ஆயில்ய நக்ஷத்திரம் தைதுலே கரணம் கூடிய காலத்தில் கலியுக சுத்த தினத்தில் தற்பரை அர்த்தாதிகமின்மையால் அது நீங்க 28 நாழிகை 1 விஞடிக்குக் கன்னியா லக்கினத்தில் ஸ்ரீ லோக ரட்சகரான சூரியபகவான் மீனராசியிலிருந்து மேஷராசி சங்கிரமணமாக, கலியுகாப்தம் 5082 துன்மதி ஞு சௌரமான சித்திரைமாதப் பிரவேசம் செய்தருளுகின்ருர். அன்று விஷு புண்ணிய காலமாகும். சங்கிரமண வாராதிபதி சந்திரன் துன்மதிஞுத்திற்கு வானமண்டலத்தில் மந்திரியாகப் பதவி ஏற்கிருர். சங்கிரமண கால கிரகஸ்திதியின் பலனுவது உலகில் எங்கும் பிரஜைகள் க்ஷேமத்துடன் பல கிரியைகள்

புரிந்து ஜீவனம் செய்வார்கள். சர்வேஸ்வரன் திருவருளால் உலக நாடுகளில் அதிபர்களின் பான்மையில் பரஸ்பர எண்ணம் உதயமாகி ஒருநாட்டுக்கு ஒருநாடு உணவு உடை தொழிற்கருவிகள், இயந்திரங்கள், தற்காப்பு ஆயுதம் ஆகியவைகள் பரிவருத்தனையாகக் கொண்டு நிறைவுறும். தேசமெங்கும் ஆன்றோர்களால் சிவபுண்ணிய காரியங்கள் நடைபெற்றுவரும். அதனினின்றும் லோகப் பிரஜைகளுக்கு உய்வு ஏற்படும். தேசங்களில் மன்னர்கள் ஜனதிபதிகள் மந்திரிகள் எல்லாப் பிராந்தியங்களிலுமுள்ள பிரஜைகள் நலமடையத் திட்டத்துடன் செயலாற்றி வருவார்கள். பிரஜைகள் நன்மையடைந்து க்ஷேமமாக வாழ்வார்கள்.

உலகிலுள்ள திருமடங்கள் ஆசாரிய பீடங்களில் வந்துள்ள பரமாசாரியர்களாகத் திகழ்கின்ற சிவஞான குருமகான்கள் லோகத்திற்கு, சிவசமய சன்மார்க்கம்போதித்து ஆசீர்வதித்தருள்வார்கள். தேசங்களில் எங்கும் தேவாலயங்களில் நித்தியம் ஆறுகால பூசைகள் நடைபெற்றுவரும். மூர்த்திகளுக்கு அபிஷேக அலங்காரங்கள் திருவிழாக்கள் சிறப்பாக நடைபெறும். மக்களுக்குத் தெய்வசிந்தனை ஏற்படுகின்ற தர்மமாகத் தெய்வ சன்னதிகளில் இறைவன் திருவிளையாடல் கதாகாலக்ஷேபங்கள் உபன்யாசங்கள் புராணச் சொற்பொழிவுகள் சிறப்புறநிகழும். தேவார இன்னிசைகள் வேதபாராயணங்கள் வாத்ய கீத முழக்கங்களுடன் பஞ்சமூர்த்திகளின் வீதியுலாக் காட்சி வைபவம் விமரிசையாக நடைபெறும். சகல கோடிமக்களும் இறைவன் அருள்பெற்று இனிதுவாழ்வார்கள்.

1. மேஷம் :- அசுவதி – பரணி – கார்த்திகை ¼

( சு. சே. சோ. லா. - லி. லு. லே. லோ. – அ. )

மேஷராசி ஒன்பது பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். குடும்பாபிவிருத்தியில் பணவருமானங்கள் வந்துகொண்டிருக்கும். மாதமுன்பகுதியைவிடப் பின்பகுதியில் மிகசிலாக்கிய பலனை உண்டுபண்ணும். எழுத்துமூல விஷயங்களில் நன்மைகள் ஏற்படும். வாகனசுகம் திருப்தியளிக்கும். ஓர்புனிதஸ்தலம் சென்றுவருதல் ஆகும். நல்லோர் பிரபலஸ்தர் சந்திப்பு அளவளாவல் ஏற்படச்செய்யும் தார புத்திரர்களின் சௌக்கியம் நன்ருகஇருந்துவரும். ஏப்ரல் 17, 18, 19, 20, 21, 27, 28, 29, 30 மேமீ 3, 4, 7, 8 தேதிகளில்மிகுந்தநற்பலன்தரும். ஏப்ரல் 22, 23 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திமபலன் தரும்.

துன்மதிஞ்த்தில் இராசி ஆதாயம் 2. விரயம் 14. ஆரோக்கியம் 3. அனுரோக்கியம் 0. இராஜபூஜிதம் 5. இராஜகோபம் 6. சுகம் 3. துக்கம் 3.

2. ரிஷபம் :- கார்த்திகை ¾ – உரோகிணி - மிருகசீர்ஷம் ½

( இ. ஊ. ஏ. – ஒ. வ, வி. வூ - வே. வோ. )

ரிஷபராசி 9 பாதங்களும் மிச்சிர பலனை நடக்கும். குடும்ப அபிவிருத்தியில் பண வருமானங்கள் கண்ய இயல்புக்கு ஏற்ப வந்து சேரும். பொன்மணிகள் வாங்குதல் வீடு வாகனபிராப்தி இவற்றில் பணம் முடங்கச்செய்யும். புத்திரர் புத்திரிகளுக்குச் சுபம் தரும். தாம்பத்திய வாழ்வில் சுமுகம் நிலவும். ஏப்ரல் 13, 14, 19, 20, 21, 22, 23, 29, 30 மேமீ 1, 2, 9, 10, 11 தேதிகளில் தனைாயாதி நற்பலன்களையளிக்கும். ஏப்ரல் 24, 25 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திமபலன் தரும்.

துன்மதிஞ்த்தில் இராசி ஆதாயம் 11. விரயம் 5. ஆரோக்கியம் 7 அனுரோக்கியம் 5. இராஜபூஜிதம் 4. இராஜகோபம் 2. சுகம் 6. துக்கம் 3.

3. மிதுனம் :- மிருகசீர்ஷம் ½ – திருவாதிரை – புனர்பூசம் ¾

( கா. கி. - கு. க. ங. ச்சா. – கே. கோ. ஹ. )

மிதுனராசி 9பாதங்களும் சுபமானபலனைத்தரும். குடும்பாபிவிருத்தியில் நல்ல பண வருமானங்களை ஏற்படுத்தி வரும், சகோதரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்துவரும். முயற்சித்த எல்லாக்காரியங்களும் வெற்றிகரமாக நடைபெற்றுவரும். எழுத்துமூல விஷயங்களில் தஸ்தாவேஜுகளில் பூரண நற்பலன் தரும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்து வரும். ஏப்ரல் 15, 16, 22, 23, 24, 25 மே மீ 1, 2, 3, 4, 7 ,8 12, 13 தேதிகளில் தனுதாயாதி நற்பலன்களையளிக்கும். ஏப்ரல் 26, 27 28 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திம பலன் தரும்.

துன்மதி ஞ் த்தில் இராசி ஆதாயம் 14. விரயம் 2. ஆரோக்கியம் 2. அனுரோக்கியம் 5. இராஜபூஜிதம் 1. இராஜகோபம் 2. சுகம் 6. துக்கம் 3.

4. கடகம் :- புனர்பூசம் ¼ – பூசம் – ஆயில்யம்.

( ஹி. – ஹு. ஹே. ஹோ. ட. - டி. டு. டோ. )

கடகராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். குடும்ப அபிவிருத்தியில் பணவருமானம் கண்ய இயல்புக்கு ஏற்ப

வரும். சகோதரர்களுக்கு நல்லன ஏற்படும். வித்தியா வியா பாராதிகளில்கலைத்துறைகளில் புதியஏற்பாடுகள் ஆகும்.எல்லாக் காரியங்களும் செம்மையாக நடைபெற்றுக்கொண்டிருக்கும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்து வரும். ஏப்ரல் 13, 17, 18, 24, 25, 26, 27, 28 மேமீ 3, 4, 5, 6, 9, 10, 11 தேதி களில் தெய்வதரிசனம் மனோபலம் காரியஜெயம் ஆகிய நற் பலன்களை ஏற்படுத்தும். ஏப்ரல் 29, 30 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திமபலன் தரும்.

துன்மதி ஹு த்தில் இராசி ஆதாயம் 14. விரயம் 8. ஆரோக் கியம் 6. அனுரோக்கியம் 5. இராஜபூஜிதம் 6. இராஜகோபம் 3. சுகம் 3. துக்கம் 3.

5. சிம்மம் ,- மகம் – பூரம் – உத்திரம் ¼

( ம. மி. மு. மே. – மோ. ட. டி. டு. – டே.

சிம்மராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். குடும்ப அபிவிருத்தியில் பண வரவு செலவுகள் சரிசமனாக இருந்து வரும். ஏப்ரல் மாதத்தைவிட மேமாதத்தில் வெகு நன்மைகள் ஏற்படும். ஜீவனோபாயத் தொழில்களில் நல்லன ஏற்பட்டு வரும். ஒப்பந்தம் லேவாதேவிகளில் புதியன ஏற்படும். தார சௌக்கியம் புத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்து வரும். ஏப்ரல் 14, 15, 16, 19, 20, 21, 26, 27, 28, 29. 30 மே மீ 5, 6, 7, 8, 12, 13, தேதிகளில் தனுதாயாதி நற்பலன்களை ஏற்படுத்தும். மே மீ 1, 2 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திம பலன் தரும்.

துன்மதி ஹு த்தில் இராசி ஆதாயம் 11. விரயம் 11. ஆரோக் கியம் 4. அனுரோக்கியம் 4. இராஜபூஜிதம் 6. இராஜகோபம் 6. சுகம் 3. துக்கம் 3.

6. கன்னி :- உத்திரம் ¾ – ஹஸ்தம் – சித்திரை ½

(டோ. ப. பி. – பு. ஷ. ண. ட. - பே. போ. )

கன்னியாராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். பண்வருமானம் நல்லவிதத்தில் வரும். குடும்பத்தில் நல்ல காரியங்கள் நடக்கும். சகோதரர் விசுவாசம் ஒத்துழைப்பு பக்க பலமாக இருந்துவரும். வாகனசுகம் திருப்தியளிக்கும். புத்திரர்கள் மேன்மைஸ்திதியில் இருந்துவருவர். மனைவிக்குப் பித்தாதிக்க நலிவு ஏற்பட்டுக் குணமாகும். ஏப்ரல் 13, 17, 18,

22, 23, 29, 30, மேமீ 1, 2, 7, 8, 9, 10, 11, தேதிகளில் அரசாங்க கௌரவம் நன்மதிப்பு தனுதாயம் தரும். மே மீ 3, 4, தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திமபலன் தரும்.

துன்மதி வருடத்தில் இராசி ஆதாயம் 14. விரயம் 2. ஆரோக்கியம் 2. அனுரோக்கியம் 5. இராஜபூஜிதம் 1. இராஜகோபம் 2. சுகம் 6. துக்கம் 3.

7. துலாம் :- சித்திரை ½ - சுவாதி - விசாகம் ¾

(ர. ரி. - ரு. ரே. ரோ. தா. - தி. து. தே.)

துலாராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். குடும்பத்தில் தனவருமானங்கள் கணிசமாக வந்துசேரும். சகோதரர் சம்பந்தமாக நல்ல செலவு செய்யும். மேமீ 7வ க்கு வீடு வாகனம், போக்கியப் பொருள்களில் நல்லன ஏற்படும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்துவரும். மனைவி வழி நற்காரியங்களில் ஈடுபாடு ஆகும். ஏப்ரல் மீ 13, 14, 15, 16, 19, 20, 21, 24, 25, மே மீ 1, 2, 3, 4, 9, 10, 11, 12, 13, தேதிகளில் மிகுந்த நற்பலன் தரும். மே மீ 5, 6, தேதிகளில் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திமபலன் தரும்.

துன்மதி வருடத்தில் இராசி ஆதாயம் 11. விரயம் 5. ஆரோக்கியம் 7. அனுரோக்கியம் 5. இராஜபூஜிதம் 4. இராஜ கோபம் 2. சுகம் 6. துக்கம் 3.

8. விருச்சிகம் :- விசாகம் ¼ - அனுஷம் - கேட்டை.

(தோ. - ந. நி. நு. நே. - ய. யி. யு.)

விருச்சிகராசி 9 பாதங்களும் சுபமான பலன்களைத்தரும். குடும்பாபிவிருத்தியில் நல்ல பணவருமானங்களை ஏற்படுத்தும். சகோதரர் பந்துமித்திரர்களின் விசுவாசம் அனுசரணை மனக் களிப்பை ஏற்படுத்தும். எல்லாக் காரியங்களும் வெற்றிகரமாக நடைபெற்றுவரும். சத்துரு பங்கம் ஆகும். தாரபுத்திரர்களின் நலன் நன்றாக இருந்துவரும். ஏப்ரல் 14, 15, 16, 17, 18, 22, 23, 27, 28, மேமீ 3, 4, 5, 6, 12, 13, தேதிகளில் தனுதாயாதி நற்பலன்களை ஏற்படுத்தும். மே மீ 7, 8, தேதிகள் சந்திராஷ்டம். மற்ற தேதிகளில் மத்திமபலன் தரும்.

துன்மதி வருடத்தில் இராசி ஆதாயம் 2. விரயம் 14. ஆரோக்கியம் 3. அனுரோக்கியம் 0. இராஜபூஜிதம் 5, இராஜ கோபம் 6. சுகம் 3. துக்கம் 3.

9. தனுசு :- மூலம் - பூராடம் - உத்திராடம் ¼

( யே. யோ பா. பி. - பு. த. ப, ட. - பே. )

தனுர்ராசி 9 பாதங்களும் மிச்சிர பலனுக நடக்கும். குடும்பாபிவிருத்தியில் பணவருமானம் நல்லவிதத்தில் வரும். அடிக்கடி வெளியூர் பயணம் சென்றுவருதல் ஆகும். செலவு அதிகமாகும். ஞாயிற்றுக்கிழமையில் சூரியார்ச்சனை செய்ய வயிற்றளவு போன்ற சிறு உபாதைகள் நீங்கும். வித்தியா வியாபாராதிகளில் செல்வாக்கை ஏற்படுத்தும். புத்திரன் சிறிய தந்தை இவர்களுக்கு ஏற்படுகின்ற விபத்துக்கள் நீங்கும். ஏப்ரல் 17, 18, 19, 20, 21, 24, 25, 29, 30, மே மீ 5, 6, 7, 8, தேதிகளில் நற்பலன் தரும். மேமீ 9, 10, 11, தேதிகள் சந்திராஷ்டமம். மற்றதேதிகளில் மத்திமபலன் தரும்.

துன்மதி வருடத்தில் இராசி ஆதாயம் 5. விரயம் 5. ஆரோக்கியம் 1. அனுரோக்கியம் 1. இராஜபூஜிதம் 4. இராஜ கோபம் 2. சுகம் 6. துக்கம் 3.

10. மகரம் :- உத்திராடம் ¾ - திருவோணம் - அவிட்டம் ½.

( போ. ஜ. ஜி. - கி. கு. கே. கோ. - கா. கி. )

மகரராசி 9 பாதங்களும் மிச்சிரபலனுக நடக்கும். குடும்பாபி விருத்தியில் பணவருமானம் வரும். எல்லாக் காரியங்களும் கௌரவஸ்திதியில் நடந்துகொண்டிருக்கும். சகோதரர், பந்து மித்திரர்களின் விசுவாசம் அனுசரணை பலம்தரும். வித்வத்துவம் கலைத்துறையில் பிரபலம் ஏற்படும். புத்திரர் பௌத்திரர்களின் நலம் மனமகிழ்சியாகும். தாம்பத்திய வாழ்வில் சுமுகம் நிலவும். ஏப்ரல் 13, 19, 20, 21, 22, 23, 26, 27, 28, மே மீ 1, 2, 7, 8, 9, 10, 11, தேதிகளில் மிகுந்தநற்பலன் ஏற்படும். மே மீ 12, 13 தேதிகள் சந்திராஷ்டமம், மற்றதேதிகளில் மத்திமபலன் தரும்.

துன்மதிஞூத்தில் இராசி ஆதாயம் 8. விரயம் 14. ஆரோக்கியம் 2. அனுரோக்கியம் 3. இராஜபூஜிதம் 5. இராஜகோபம் 6. சுகம் 3. துக்கம் 3.

11. கும்பம் :- அவிட்டம் ½ - சதயம் - பூரட்டாதி ¾

( கு. கே, - கோ. ஷ. ஸி. ஸு. - ஸே. ஸோ. தா. )

கும்பராசி 9 பாதங்களும் சுபமானபலனைத்தரும். குடும்பாபி விருத்தியில் கணிசமாக பணவரவை ஏற்படுத்தும். பொன் மணி பூஷணம் தரும். மேமுதல் எழுத்துமூல விஷயத்தில் ஒப்பந்தம் லேவாதேவிகளில் நல்லன ஏற்படும். மேமீ 8உ வாகனம்

கட்டிட பிராப்தியில் நல்லன உருவாகும். இம்மாதம் புத்திர பிராப்தி ஒன்று ஏற்படும். தாம்பத்திய வாழ்வில் சுமுகம் நிலவும். ஏப்ரல் 13, 14, 15, 16, 22, 23, 24, 25, மே மீ 3, 4, 9, 10, 11, 12, 13 தேதிகளில் தனதாயம்வரும். காரியஜயம் ஆகும். ஏப்ரல் 17, 18 தேதிகளில் சந்திராஷ்டமம். மற்றதேதிகளில் மத்திமபலன்தரும்.

துன்மதிஞூத்தில் இராசி ஆதாயம் 8. விரயம் 14. ஆரோக்கியம் 2. அனுரோக்கியம் 3. இராஜபூஜிதம் 5. இராஜகோபம் 6. சுகம் 3. துக்கம் 3.

12. மீனம் :- பூரட்டாதி ¼ – உத்திரட்டாதி – ரேவதி.
( தி. – து. ஸ. ச. த. – தே. தோ ச. சி. )

மீனராசி 9 பாதங்களும் மிச்சிரபலனுக நடக்கும். குடும்பத்தில் நிரந்தரமாக வருமானம்வரும். அவசியமான பிரச்சினைகளுக்கு எதிர்பார்த்திருந்தபணம் வந்துசேரும். சகோதரருக்குச் சௌக்கியம் தரும். வித்வத்துவம் கலைத்துறையில் நன்மதிப்பை உண்டுபண்ணும். ஜீவனோபாயத்தொழிலில் இலாபம் விரயம் சமமாக இருந்துவரும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்துவரும். ஏப்ரல் 14, 15, 16, 17, 18, 24, 25, 26, 27, 28, மே மீ 1, 2, 5, 6, 12, 13, தேதிகளில் நற்பலன்களை ஏற்படுத்தும். ஏப்ரல் 19, 20, 21, தேதிகள் சந்திராஷ்டமம், மற்றதேதிகளில் மத்திமபலன் தரும்.

துன்மதிஞூத்தில் இராசி ஆதாயம் 5. விரயம் 5. ஆரோக்கியம் 1. அனுரோக்கியம் 1. இராஜபூஜிதம் 4. இராஜகோபம் 2, சுகம் 6. துக்கம் 3.

---

தருமையாதீனக் குருமுதல்வர்

## ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள் தோத்திரம்

சீரணியும் நுதலின்விழி மழுமான் நாகம்
திருந்தும்எரி பொருந்துவிடம் தெரிந்திடாமல்
தாரணி அன்பரைஆள அவர்போல் வந்த
சைவசிகாமணி எவர்க்கும் தலைவன் எங்கோன்
காரணியும் நெடியபொழிற் கமலை வேந்தன்
கருணைமழை பொழியும்இரு கடைக்கணுளன்
பாரணியும் ஞானசம் பந்தன் எந்தை
பரமன்இரு சரணமலர் பரவி வாழ்வாம்.

— ஸ்ரீ சம்பந்தசரணுலயர்.

# சீகாழி திருமுலைப்பால் திருவிழாவில்

## "திருமுறைக் கலாநிதி"

### பட்டம் பெற்றவர்கள்

[ நற்றமிழ்வல்ல ஞானசம்பந்தருக்கும், நாவினுக்கு அரசருக்கும் திருவீழிமிழலையில், பஞ்சம் வந்துற்றபோது சிவபிரான் உலகவர் அறியப் படிக்காசு வழங்கியருளினன். இப்படிக் காசுகொண்டு இருவரும் சொல்லால் சாற்றிச் சோறிட்டுத் துயர்கூர்வறுமை தொலைத்திட்டார். இதன் நினைவாகப் பல்லாண்டுகள் திருமுறைப்பணிசெய்த ஓதுவாமூர்த்திகளுள் ஒருவருக்குத் திருஞானசம்பந்தர் அவதாரத் தலமாகிய சீகாழியில் திருமுலைப்பால் விழாவிலும், மற்றொருவருக்குத் திருநாவுக்கரசர் அவதாரத்தலமாகிய திருவாமூரில் சித்திரைச் சதய நன்னாளிலும் ஆண்டுதோறும் தருமையாதீனத்தின் சார்பில் 'திருமுறைக்கலாநிதி' என்ற பட்டம் வழங்கி ஒருபவுன் எடையுள்ள பொற்பதக்கமும், ரூபாய் 1001 பொற்கிழியும் வழங்கப்பெற்று வருகின்றன. ]

| | ஊர் | பெயர் | ஆண்டு |
|---|---|---|---|
| 1. | சென்னை | திரு. எம். எம். தண்டபாணி தேசிகர் | 1966 |
| 2. | ஆச்சாள்புரம் | திரு. எம். சுப்பிரமணிய முதலியார் | 1967 |
| 3. | காஞ்சிபுரம் | திரு. சாரங்கபாணி செட்டியார் | 1968 |
| 4. | ஆச்சாள்புரம் | திரு. காசிநாத தேசிகர் | 1969 |
| 5. | தருமபுரம் | திரு. ஆர். வேலாயுத ஓதுவார் | 1970 |
| 6. | தருமபுரம் | திரு. சு. சம்பந்த ஓதுவார் | 1971 |
| 7. | திருக்களர் | திரு. தி. சுப்பையா தேசிகர் | 1972 |
| 8. | தேவகோட்டை | திரு. பொ. தியாகராசப் பிள்ளை | 1973 |
| 9. | திருப்பனந்தாள் | திரு. எம். சுப்பிரமணிய முதலியார் | 1974 |
| 10. | குடந்தை | திரு. ப. சுந்தரேசம் பிள்ளை | 1975 |
| 11. | திருவாரூர் | திரு. ஆர். கணேசம் பிள்ளை | 1976 |
| 12. | திருச்சி | திரு. தி. சுப்பிரமணிய தேசிகர் எம். ஏ. | 1977 |
| 13. | வேளூர் | திரு. க. சொக்கலிங்க ஓதுவார் | 1978 |
| 14. | திருவாவடுதுறை | திரு. டி. எம். விசுவலிங்கம் பிள்ளை | 1979 |
| 15. | பாகனேரி | திரு. ஆர். சம்பந்தம் பிள்ளை | 1980 |

**இவ்வாண்டு 1981 ல் பட்டம் பெறுபவர் :**

தருமையாதீன ஓதுவார்,

**திரு. எஸ் திருநாவுக்கரசு தேசிகர்.**

# சித்திரை மாதச் சிறப்பு நாட்கள்

13—4—81 திங்கள், தமிழ்வருடப்பிறப்பு, வேளூர் ஸ்ரீ வைத்திய நாதசுவாமிக்குச் சீதளகும்பம் ஆரம்பம், சீகாழியில் உச்சிக்காலத்தில் ஸ்ரீ உமாமகேசுவரருக்குப் புழுகாப்பு, திருக்கடவூர் ஸ்ரீ காலசம்கார மூர்த்திக்கு அபிஷேகம், விஷு புண்யகாலம், மேஷரவி 28-1, புதுப் பஞ்சாங்கம் படித்தல், சைத்ரோத்ஸவத்தில் நான்காம் திருநாள், தில்லைவாழந்தணர் குருபூஜை.

14—4—81 செவ்வாய், சைத்ரோத்ஸவ ரிஷப வாகனக்காட்சி, திருக்கடவூர் ஸ்ரீ காலசம்காரமூர்த்திக்கு அபிஷேகம், திருவையாற்றில் ஆத்மபூஜை, திருச்சியில் ஸ்ரீ மாத்ருபூதேசுவரர் ரத்னவதிக்குத் தாயாக வருதல்.

15—4—81 புதன், திருக்கடவூர் ஸ்ரீ காலசம்காரமூர்த்திக்கு அபிஷேகம். இரவு காலசம்காரக் காட்சி.

16—4—81 வியாழன், சித்திரைத் திருவிழாவில் திருக்கல்யாண விழா. பிரதோஷம்.

17—4—81 வெள்ளி, ஸ்ரீ உமாபதி சிவாசாரியார் குருபூஜை.

18—4—81 சனி, வேளூரில் மஹாந்நியாஸபூர்வக மண்டலா பிஷேக ஆரம்பம். சைத்ரோற்சவ திருத்தேர்.

19—4—81 ஞாயிறு, திருக்கடவூர், சீகாழி, திருப்பனந்தாள், திருவையாறு முதலிய தலங்களில் சைத்ரோற்சவ தீர்த்தம். குத்தாலம் பஞ்சமூர்த்திகள் காவிரியில் தீர்த்தம் கொடுத்தல், பௌர்ணமிவிரதம், மாதபூஜையில் மருக்கொழுந்து சாத்துதல்.

21—4—81 செவ்வாய், திருவையாறு, கும்பகோணம் முதலிய தலங்களில் சப்தஸ்தானம்.

22—4—81 புதன், ஆச்சாள்புரம் ஸ்ரீ சிவலோகத்தியாகராஜ சுவாமிக்கும், மணக்குடி ஸ்ரீ சுந்தரேசுவரசுவாமிக்கும் சம்வத்ஸர அபிஷேகம்.

23—4—81 வியாழன், சங்கடஹர சதுர்த்தி.

26—4—81 ஞாயிறு, திருக்கடவூர் ஸ்ரீ அமிர்தகடேசுவர சுவாமிக்கும், திருக்குறுக்கை ஸ்ரீ யோகீசுவரசுவாமிக்கும் சம்வத்ஸர அபிஷேகம், காளாஷ்டமி.

27—4—81 திங்கள், ஸ்ரீ நடராஜர் அபிஷேகம்.

29—4—81 புதன், ஸ்ரீ அப்பர்சுவாமிகள் குருபூஜை. திருவாமூரில் ஸ்ரீ அப்பர் சுவாமிக்கு விசேஷ வழிபாடு, திருப்புகலூரில் ஸ்ரீ அப்பர் சுவாமிகள் மோக்ஷம்.

1—5—81 வெள்ளி, கருங்குயில்நாதன்பேட்டை ஸ்ரீ சக்திபுரீசுவர சுவாமிக்குச் சம்வத்ஸராபிஷேகம். பிரதோஷம்.

2—5—81 சனி, மாதசிவராத்திரி.

3—5—81 ஞாயிறு, சர்வ அமாவாசை.

4—5—81 திங்கள், அக்னி நக்ஷத்திராரம்பம் 1-18,

5—5—81 செவ்வாய், வேளூர்க் கிருத்திகை, தருமபுரம் ஸ்ரீ தரும புரீசுவரசுவாமி ஆலயத்தில் சண்முகருக்குக் கிருத்திகை அபிஷேகம்.

6—5—81 புதன், காரைக்கால் தருமபுரம் ஸ்ரீ யாழ்முரிநாதசுவாமி சம்வத்ஸராபிஷேகம். அக்ஷயதிருதீயை.

9—5—81 சனி, ஆச்சாள்புரம், திருக்குவளை, வைத்தீசுவரன் கோயில், மதுரை, மாயூரம் முதலிய தலங்களில் வைசாக உற்சவ ஆரம்பம்.

11—5—81 திங்கள், ஆயில்யவிழா, தருமையாதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமா சாரிய சுவாமிகள் ஜன்மநக்ஷத்திரவிழா (ஆயில்யம்), ஒவ்வொரு மாதமும் ஆயில்ய நக்ஷத்திரத்தன்று பாடல்பெற்ற திருத்தலங்களில் முறையே அபிஷேக ஆராதனைகளும் பதிகவெளியீடும் நடைபெறும்.

12—5—81 செவ்வாய், திருக்கடவூர் ஸ்ரீ முனீசுவரபூஜை.

13—5—81 புதன், வைசாக உற்சவ ரிஷபவாகனக் காட்சி.

# தருமையாதீனத்தில் சமயப்பயிற்சி வகுப்பு

ஸ்ரீ குருஞானசம்பந்தர் பணிமன்றத்தின் சார்பில், தருமை ஆதீனம் ஆதிகுருமூர்த்திகளாகிய ஸ்ரீ குருஞானசம்பந்தர் குரு பூஜைப் பெருவிழாவையொட்டி இவ்வாண்டும் வழக்கம்போல் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் அருளாணைப்படி 10—5—81 முதல் 24—5—81 முடிய பதினைந்துநாட்கள் தருமையாதீனத் திருமடத்தில் சமயப் பயிற்சி வகுப்பு நடைபெற உள்ளது.

சமயப் பயிற்சி வகுப்பில் பட்டப் படிப்பிற்குக் குறையாத கல்வியுடையவர்களும், சமயத் துறையில் ஓரளவேனும் ஆர்வமும் பள்ளி இறுதி வகுப்புவரை படித்தவர்களும், ஆண் பெண் இருபாலாரும் பயிற்சியாளராகச் சேர்த்துக்கொள்ளப்பெறுவர். இதில் ஆசிரியர்களுக்கு முதலிடம் தரப்பெறும். சமயநூல்களில் ஆழ்ந்தபுலமையும் அனுபவமுமுடைய அறிஞர்பெருமக்களால் வகுப்புக்கள் முறையாக நிகழ்த்தப்பெறும். சைவ சித்தாந்த சாத்திரம், திருமுறைகள், வேதாகம புராண இதிகாசக் கருத்துக்கள், உபநிடதம், பத்ததிபற்றிய பொதுச்செய்திகள், சமயவிழா விரதம் பண்டிகைகளைப்பற்றிய உண்மைகள் முதலியன போதிக்கப்பெறும். சமயச்சொற்பொழிவுகள், ஆலய வழிபாடு, தியானப் பயிற்சி, யோகாசன முறைகள் முதலியனவும் இடம் பெறும். உணவும் உறையுளும் இலவசம்.

கலந்துகொள்ள விரும்புவோர் தனித்தாளில் தங்கள் பெயர் வயது, கல்வித் தகுதி, சமயம், ஆற்றிவரும் பணி, இதற்குமுன்னர் சமயப் பயிற்சி வகுப்புக்களில் கலந்துகொண்ட விபரம் முதலியனவற்றைத் தெளிவாக எழுதி, வை. ஆறுமுகம் பிள்ளை, கௌரவப் பொதுச் செயலாளர், ஸ்ரீ குருஞானசம்பந்தர் பணி மன்றம், தருமபுரம், மாயூரம் 609 001. என்ற முகவரிக்கு ரூ. 10. பொறுப்புக் கட்டணம் செலுத்தி அஞ்சலக ரசீதை இணைத்து 30—4—81 க்குள் அனுப்பிவைக்கவேண்டும். அனுமதிக் கடிதம் பெற்றவர்கள் தங்கள் சொந்தச் செலவில் தருமைக்குவந்து சமயப் பயிற்சி வகுப்பில் கலந்துகொண்டு பயனடையலாம். பயிற்சி பெறுவோருக்குச் சான்றிதழ் வழங்கப்பெறும்.

உத்தரவுப்படி,

தருமபுரம் ஆதீனம்,
தருமபுரம்.
10—4—1981.

**வை. ஆறுமுகம் பிள்ளை,**

கௌரவப் பொதுச் செயலாளர்,
ஸ்ரீ குருஞானசம்பந்தர் பணி மன்றம்.

Printed & Published by V. Ramaiah Pillai, Manager, Dharmapuram at the Gnanasambandam Press Dharmapuram, Mayuram. 10-4-81